



30 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com






நதி: 30 பாலம்: 14 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் July 15, 2020

# ஒத்திகைத் தேர்தல் திருப்திகரமாக நடைபெற்றது!

எதிர்வரும் 2020 ஒகஸ்ற் 5இல் இலங்கை நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெற உள்ளது. இதனால் வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்குகள் எண்ணும் மையங்களில் செயல்படுத்தப்படும் புதிய சுகாதார நடவடிக்கைகளை சோதிக்க ஜூன் 13 மற்றும் 14 வார இறுதி நாட்களில் ஓர் ஒத்திகைத் தேர்தல் நடத்தப்படும் என இலங்கையின் தேசிய தேர்தல் ஆணையம் (NEC) அறிவித்திருந்தது.

அதன்படி இலங்கையில் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் 4 மாவட்டங்களில் இந்த ஒத்திகைத் தேர்தல் நடைபெற்றது. இந்த ஒத்திகையின் போது வாக்காளர்கள் எவ்வாறு புதிய சுகாதார முறையைக் கடைப்பிடிக்கின்றனர் மற்றும் வாக்களிப்பிற்கு மேலதிக நேரம் ஒதுக்கப்பட வேண்டுமா என அவதானிக்கப்பட்டது. இந்த ஒத்திகைத் தேர்தலில் வாக்களிக்க வந்த வாக்காளர்கள் எல்லோரும் முகக் கவசம் (mask) அணிந்திருந்தனர் என்றும் இந்த ஒத்திகை வாக்களிப்பு திறம்பட நடைபெற்றது எனவும் NECஇன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய ஊடகங்களுக்குத் தெரிவித்தார். இந்த ஒத்திகைத் தேர்தலில் வாக்களிக்க வந்த வாக்காளர்கள் எல்லோரும் முகக் கவசம் அணிந்ததுடன் ஒரு மீற்றர் இடைவெளி விட்டு வரிசையில் நின்றிருந்தனர் என BBC ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. அத்துடன் வாக்களிக்க வந்தோர் எல்லோரும் தமது சொந்தப் பென்சில் அல்லது பேனாவை புள்ளடி போடுவதற்குக் கொண்டுவந்ததும் குறிப்பிடத்தக்கது என அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றியோர் முழு முகத்தையும் மறைக்கும் கவசங்களை (shield) அணிந்திருந்தனர் அல்லது அவர்கள் பிளாஸ்ரிக் திரைக்குப் (plastic screens) பின்னால் இருந்து கொண்டு பணியாற்றினர். வாக்களிக்க வந்தோருக்கு சுத்திகரிக்கும் திரவம்



தெளிக்கப்பட்டது. நடைபெற இருக்கும் தேர்தலை பல அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்காணிக்க இருக்கின்றன. சுதந்திர மற்றும் நியாயமான தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பு (ANFREL), தேர்தல் வன்முறையைக் கண்காணிக்கும் மையம் (CMEV), தேசிய வாக்கெடுப்புக் கண்காணிப்பு மையம் (NPOC), மற்றும் சுதந்திரம் மற்றும் நியாயமான தேர்தலுக்கான பிரசார மையம் (CaFFE) என்பன இவற்றுள் சிலவாகும்.

தேர்தலில் வாக்களிப்பதற்கான சுகாதார நடவடிக்கைகளை அரசாங்கம் வர்த்தமானி மூலம் விரைவில் பிரசுரிப்பதன் மூலம் அதை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பதோ அல்லது அமல்படுத்துவதோ இலகுவாக இருக்கும் என CaFFE நிர்வாக இயக்குனர் Manas Makeen ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்

மிகவும் குறைவானோரே தினமும் கோவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு வந்த இலங்கையில் கடந்த சில நாட்களாக இது அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. ஜூலை 8இல் 13 பேரும், ஜூலை 9இல் 60 பேரும், ஜூலை 10இல் 300 பேரும், ஜூலை 11இல் 57 பேரும், ஜூலை 12இல் 106 பேரும், ஜூலை 13இல் 29 பேரும் கோவிட்-19 தொற்று நோய்க்கு உள்ளாகியுள்ளனர். இதுவரை இலங்கையில் கோவிட்-19 நோயின் தொற்றுக்கு உள்ளானோர் 2,646 பேரும் இறந்தோர் 11உம் ஆகும்.

“இலங்கையில் கோவிட்-19இன் தொற்று தொடர்ந்து அதிகரித்தால் ஒகஸ்ற் 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்பதை அப்போதைய நிலைமையைப் பொறுத்தே முடிவு எடுக்கப்படும்” என NEC இன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் “வாக்காளர்களினதும் எங்களினதும் பாதுகாப்புக் கருதி சுகாதார வழிகாட்டல்களுக்கு அதிமுக்கியத்துவம் வழங்கி எமது பணியை முன்னெடுக்கிறோம்” என்றார்.

இவ்வாறு கோவிட்-19 தொற்று நோய்ப் பரம்பல் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த இலங்கையில் பாடசாலைகள் ஜூலை 13இல் இருந்து ஜூலை 17ஆம் திகதி வரை மாணவர்களுக்கு மூடப்பட்டுள்ளன. இலங்கையில் தபால் மூலம் வாக்களிப்பு ஜூலை 13ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகிறது. தபால் மூலம் வாக்களிப்பதற்குப் பாவிக்கப்படும் பாடசாலைகள் தேர்தல் வாக்களிப்பு வேலைகளுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.




































# ரிஷிகேஷ் – முனிவர்கள் வாழ்ந்த புனித பூமி

ரிஷிகேஷ் என்றால் முனிவர்கள் வாழும் தேசம் என்று பெயர். பூமி, நீரின் மாய சக்திகள் மற்றும் முனிவர்களின் தவப் பலத்தினால் ரிஷிகேஷ் மிகவும் உயர்ந்த புனித இடமாக விளங்குகின்றது. இமய மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள இந்தப் புனித நகரத்துக்கு இராமாயண காலத்திலேயே தவம் செய்யப் பல்வேறு பகுதிகளில் இருந்து முனிவர்கள் வந்திருக் கின்றனர். இந்த நகரத்தை யோகாவின் பிறப்பிடமாகவும் மற்றும் அதன் தலைமை யகமாகவும் கருதப்படுகிறது. உலகம் முழுவதிலுமிருந்து ஏராளமான மக்கள் யோகா கற்றுக்கொள்வதற்காக இங்கு வருகின்றனர். மேலும் ஆயுர்வேத சிகிச்சைகள் மூலம் பல்வேறு நோய்களுக்கு மருந்துகள் மற்றும் தியானப் பயிற்சிகள் வழங்கும் நம்பிக்கையான நிறுவனங்கள் அதிக அளவில் இங்கு உள்ளன. இங்கு பாய்ந்து ஓடும் கங்கை நதியில் காற்று அடைக்கப்பட்ட ரப்பர் படகு பயணம் மிகவும் பிரபலமானதாகும்.

ரிஷிகேஷில் முக்கியமாகக் காணவேண்டிய இடங்களையும் அவற்றைப் பற்றிய சிறப்புகளையும் சுருக்கமாகக் காணலாம்.
(1) நீலகண்ட மகாதேவ் கோயில் - இந்து புராணங்களின்படி, பாற்கடலில் அமிர்தத்தை கடைந்து எடுப்பதற்குக் கயிறாகப் பயன் படுத்திய வாசுகி என்ற நாகத்தின் வாயில் இருந்து வந்த விஷம் அமிர்தத்தை மாசு படுத்தாமல் இருக்க அதை தன்வசப்படுத்தி உட்கொண்ட சிவபெருமான் இங்குவந்து தவம் செய்ததாக நம்பப்படுகின்றது. கோயில் வளாகத்தில் உள்ள இயற்கை யான நீரூற்றில் பக்தர்கள் புனித நீராடலாம்



(2) குஞ்சபுரி தேவி கோயில் - இந்த ஆலயம் புராண முக்கியத்துவம் வாய்ந்த 51 சக்தி பீடங்களில் ஒன்றாகும். மலையின் உச்சியில் உள்ள இந்த தேவியை தரிசிக்க 80 படிக்கட்டுகள் ஏறிச்செல்ல வேண்டும். காலை சூரிய உதயத்தைக் காணவும், யோகா மற்றும் தியானப் பயிற்சிகள் செய்யவும் உகந்த இடமாக விழங்குகின்றது.

(3) திரிவேணி சங்கமம் - இங்கு புனித நீராடுதலும் மற்றும் மாலை வேளையில் கங்கை தேவிக்கு செய்யப்படும் மகா தீப ஆராதனை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். திரிவேணி படித்துறைக்கு அருகில் உள்ள ரகுநாத் மற்றும் பாலாஜி ஆலயமும் பிரபலமானதாகும்.

(4) பாரத் கோயில் - இந்த ஆலயம் விஷ்ணுக்கு அர்பணிக்கப்பட்டதாகும். கோயில் கருவறையில் ஒற்றை சாலிகிராம் கருப்புக் கல்லால் வடிவமைக்கப்பட்ட விஷ்ணுவின் சிலை உள்ளது.

(5) வசிஷ்ட்டர் குகை - கங்கை நதிகரை யில் உள்ள இக்குகையில் முனிவர் வசிஷ்ட்டர் தியானித்ததாகக் கூறப்படுகின்றது.

(6) வீர்பத்ரா கோவில் - சிவனின் தோற்றமான வீர்பத்ராவுக்கு அர்ப்பணிக்கப் பட்ட பழமையான ஆலயமாகும்.

(7) பூத்நாத் கோயில் - பல தளங்களைக் கொண்ட கோயிலின் மேல் மாடியில் சிவபெருமானுக்கு ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தின் மேல் மாடியில் இருந்து ரிஷிகேஷின் அற்புதமான காட்சியைக் காணலாம்.


(8) பதின்மூன்று மாடிக் கோயில் - ஒவ்வொரு தளத்திலும் வெவ்வேறு தெய்வங்களைக் கொண்ட பல சிறிய ஆலயங்களுடன் பல தெய்வங்களை ஒரே கூரையின் கீழ் கொண்டுள்ளது. பதிமூன்றாவது மாடியில் சிவலிங்கம் உள்ளது.

(9) இரண்டாம் ராமேஷ்வரம் - இராவணனை வதம் செய்து திரும்பிய இராமரும் இலட்சு மணரும் தமது பிரமஹத்தி தோஷம் நீங்க இங்கே வந்து தவம் செய்ததாக நம்பப்படுகின்றது.

(10) கங்கை நதியின் மறுபக்கம் செல்வதற் காக ராமர் மற்றும் இலட்சுமணர் பெயரில் அமைந்துள்ள இரும்பு தொங்கு பாலங்கள் மிகவும் அற்புதமானதாகும். தற்போது சீத்தாவின் பெயரிலும் ஒரு தொங்கு பாலத்தின் கட்டுமானபணி நடைபெறுகின்றது.

(11) கங்கை நதியின் வலது கரையில் இலட்சுமணர் தவம் செய்த இடத்தில் உள்ள இலட்சுமணன் ஆலயமும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

டெல்லியில் இருந்து, 250 கிமீ தொலைவில் உள்ள ரிஷிகேஷ்க்கு, ரயில், விமானம் அல்லது சொகுசு வாகனம் மூலம் வந்தடை யலாம். ரிஷிகேஷைச் சுற்றிப் பார்ப்பதற்கு குறைந்த பட்சம் இரண்டு நாட்கள் தேவைப் படும். இங்கு தங்குவதற்கு நல்ல வசதி



யான ஹோட்டல்கள், ஆசிரமங்கள் மற்றும் யோகா மையங்கள் உள்ளன. இங்கு மது மற்றும் அசைவ உணவை அரசாங்கம் முற்றிலுமாகத் தடை செய்துள்ளது. ரிஷி கேஷ் வழியாகத்தான் பத்ரிநாத் (விஷ்ணு தலம்) மற்றும் கேதார்நாத் (சிவதலம்) செல்ல வேண்டும். அவற்றைப்பற்றிய விவரங்களை பின்வரும் தொடர்ந்துவரும் கட்டுரைகளில் காணலாம்.



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715




# இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல்



சிவ.ஞானநாயகன்

இலங்கை நாடாளுமன்றத்துக்கு 225 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்களில் 196 பேர் நாடு முழுவதிலுமுள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் மிகுதி 29 பேரும் நாடு முழுவதும் கட்சிகளும் பெற்ற மொத்த வாக்குகளின் விகிதாசார முறைப்படியும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

ஜனநாயகத் தேர்தல் முறையில் சிறப்பானது எனக் கருதப்படும் விகிதாசாரத் தேர்தல் முறை தெற்காசிய நாடுகளில் இலங்கையில் மட்டுமே நடைபெறுகிறது. இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம் போன்ற நாடுகளில் தொகுதி ரீதியில் அதிக வாக்குகள் வாங்கியவரே வெற்றி பெற்றவராகக் கருதப்படுகிறார். இது கனடாவில் உள்ள FPTP தேர்தல்முறை போன்றது. நேபாளத்திலும் பெரும்பாலானோர் தொகுதிவாரியாகவும் சில உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுகின்றனர். பாகிஸ்தானிலும், வங்கதேசத்திலும் சில உறுப்பினர்கள் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இலங்கையில் 1978ஆம் ஆண்டில் புதிய அரசியல்சாசனம் அமலாக்கப்பட்ட பின்னர் விகிதாசாரத் தேர்தல் (PR system) முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. விகிதாசாரத் தேர்தல் முறை மூலம் இலங்கையில் முதன்முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் 1989ஆம் ஆண்டில் ஆகும். இப்புதிய விகிதாசார தேர்தல் முறை அமைக்கப்பட முன்னர் இலங்கையில் 160 தொகுதிகள் இருந்தன. இவ்விகிதாசாரத் தேர்தல் முறையில் 160 தொகுதிகளும் 22 தேர்தல் மாவட்டங்களுள் அடங்குகின்றன. அதைவிட ஒவ்வொரு மாகாணத்திற்கும் 4 உறுப்பினர்கள் வீதம் 36 உறுப்பினர்களையும் இந்த 22 தேர்தல் மாவட்டங்களுக்குள் சேர்த்தனர். இதனால் தற்போது இந்த 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் 196 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். அத்துடன் நாடு முழுவதும் 29 உறுப்பினர்கள் மேலதிகமாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இலங்கையின் அரசியல் சட்டப்படி 22 மாவட்டங்களிலும் உள்ள 160 உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றப்படமாட்டாது. ஆனால் மாவட்டங்களின் சனத்தொகைக்கு ஏற்ப ஒவ்வொரு மாகாணங்களுக்கும் வழங்கப்பட்ட 4 உறுப்பினர்களும் மாற்றப்படலாம். எவ்வாறாயினும் நாடு முழுவதிலுமுள்ள தேர்தல் மாவட்டங்களில் இருந்து விகிதாசார முறையில் தெரிவுசெய்யப் படும் 196 உறுப்பினர்களின் எண்ணிக்கையோ அல்லது மொத்த உறுப்பினர்களான 225 பேரின் எண்ணிக்கையோ மாறாது. உதாரணமாக 1989இல் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இருந்து 11 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சனத்தொகையில் ஏற்பட்ட இறக்கத்தால் 1994இல் 10 உறுப்பினர்களாக இது குறைந்தது. மீண்டும் 2000ஆம் ஆண்டில் 9 உறுப்பினராகி தற்போது 2015இல் இருந்து 7 உறுப்பினராக இது உள்ளது.


அட்டவணை -I
தேர்தல் மாவட்ட அடிப்படையில் இட ஒதுக்கீடு

| மாகாணம் | தேர்தல் மாவட்டம் | ஒதுக்கப்பட்ட இடங்கள் |
|---|---|---|
| வடக்கு | யாழ்ப்பாணம்<br>வன்னி | 07<br>06 |
| வடமத்தி | அனுராதபுரம்<br>பொலன்னறுவை | 09<br>05 |
| வடமேல் | குருநாகல்<br>புத்தளம் | 15<br>08 |
| கிழக்கு | மட்டக்களப்பு<br>அம்பாறை (திகாமடுல்ல)<br>திருகோணமலை | 05<br>07<br>04 |
| மத்திய | கண்டி<br>மாத்தளை<br>நுவரெலியா | 12<br>05<br>08 |
| மேல் | கொழும்பு<br>கம்பஹா<br>களுத்துறை | 19<br>18<br>10 |
| ஊவா | பதுளை<br>மொனராகலை | 09<br>06 |
| சப்ரகமுவ | இரத்தினபுரி<br>கேகாலை | 11<br>09 |
| தென் | காலி<br>மாத்தறை<br>அம்பாந்தோட்டை | 09<br>07<br>07 |
| மொத்தம் | | 196 |

நுவரெலிய தேர்தல் மாவட்டத்தில் 1989இல் 6 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தற்போது 2015இல் இருந்து 2 உறுப்பினர்கள் அதிகரிக்கப்பட்டு 8 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இலங்கையிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து தற்போது தெரிவு செய்யப்படுவோரின் எண்ணிக்கையை அட்டவணை-1இல் காணலாம்.

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் பெறும் வாக்குகளின் அடிப்படையில் அவர்களுக்கு இடங்கள் வழங்கப்படும். தேர்தல் நாள் அன்று வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு வழங்கப்படும் வாக்குச் சீட்டில் அந்தத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளினதும்/சுயேச்சைக் குழுக்களினதும் பெயரும் அவர்களது




(தொடர்ச்சி 05ஆம் பக்கம்...)

# நாமும் நமது இல்லமும் 562

# கனேடியப் பொருளாதார மாற்றங்கள்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

(1) இன்றைய கால (கோவிட்-19இற்கு பின்னான) ஆதனக் குறிப்புகள்.

கனேடிய மக்களின் 1 டொலர், (வரிகளின் பின்னரான) வருமானத்தில் கடன் தொகை $1.77 ஆகும்.


இந்தக் கடன் தொகை 2007இல் 1.44 டொலராகக் காணப்பட்டது.

அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், ஜப்பான், நியூசிலாந்து ஆகிய நாட்டில் வாழ்வோருடன் ஒப்பிடும்போது கனேடியர்களே அதிக கடனாளிகளாகக் காணப்படுகின்றனர்.

(2) கனேடிய மத்திய வங்கி வட்டி வீதம் - 0.25%
முதன்மை வட்டி வீதம் - 2.45%
5 வருடத்திற்குரிய மாறாத சிறந்த வட்டி வீதம் - 1.99%

(3) 2020இற்கான மத்திய அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்தில் $343 பில்லியன் அல்லது அதிகமான பற்றாக்குறை இருக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

(4) 2020இல் எதிர்பாக்கப்படும் கனடாவின் கடன் தொகை $1 ரில்லியன் (1,000 பில்லியன்) ஆகும். கனேடிய சரித்திரத்தில் இதுவே முதல்தடவை ஒரு ரில்லியனிற்கு அதிகமான கடன் தொகை.




இக்கடன் தொகை கனேடிய மொத்த வரும்படியின் (GDP)இன் 49.1% ஆகும்.

வரவுசெலவுத் திட்டத்தில் (2020) எதிர் பார்க்கப்படும் பற்றாக்குறை GDPஇன் 15.9% ஆகும்.

2018 வரவுசெலவுத் திட்டத்தில் பற்றாக் குறை GDPஇன் 8.1% ஆக இருந்தது. (இந்தப் பெறுமதிகள் 2020/2021 ஆண்டு நிதி அறிக்கை (பட்ஜட்) வந்தபின் முற்றாக மாறக்கூடிய சந்தர்ப்பங்களே காணப்படுகின்றது.)

(5) சில கனேடிய நிதி நிறுவனங்கள் அடமானக்கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தை செப்ரெம்பர் 30, 2020வரை பின்போட்டுள்ளன.

(6) ஜூன் 2020இல், ஆதன வியாபாரம் மே 2020 உடன் ஒப்பிடும்போது 89% இனால் அதிகரித்துள்ளது. அத்துடன் 2019 ஜூன் உடன் ஒப்பிடும்போது 1.4%இனால் குறைந்துள்ளது.

(7) ஜூன் 2020இல் ரொறொன்ரோவில் புதிய வீடு / மனைகளின் நிர்மானம் 33%இனால் அதிகரித்துள்ளது. (39,703 ஆதனங்கள்)

(8) ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (Greater Toronto Area) ஏப்ரல் 2020இன் ஆரம்பத்தில் 119 கட்டிடத் தொகுதிகள் (Projects) நிர்மானிப்பதற்காக இருந்தன. (ஏறக்குறைய 32,982 மனைகள்)

(9) மே 2020இல் 13.7%ஆக இருந்த வேலையற்றோரின் எண்ணிக்கை, ஜூன் 2020இல் 12.3% ஆகக் குறைவடைந்துள்ளது.

(10) அடமானம் பெறுவதற்கு credit score மிக முக்கியம். நீங்கள் பெற்ற கடன் களிற்கு செலுத்த வேண்டிய குறைந்த அளவு கட்டுப்பணத்தையாவது (minimum payment) குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் (due date) செலுத்துவதாலும், நிதி நிறுவனம் தந்த கடன் தொகைக்கு மேலதிகமான தொகையை செலவழிப் பதைத் தவிர்ப்பதாலும் உங்களது credit scoreஇனை சிறப்பாக வைத்திருக்கலாம்.

முக்கிய குறிப்பு: ஜூலை 01, 2020 இலிருந்து CMHC வீட்டு அடமானக் கடன் பெறுவோருக்குத் தேவையான credit scoreஇன் பெறுமதியை அதிகரித்துள்ளது. இதனால் எமது credit score முக்கியமாகக் காணப்படுகின்றது.

ALL LINK TRAVEL INC.
SPECIALIZE IN DESTINATION, EUROPE TOURS AND CRUISES ALL OVER THE WORLD.
WE MATCH AND BEAT ALL INTERNET PRICES





கட்டணங்கள் நிபந்தனைக்கு உட்பட்டவை
ALL INCLUSIVE CHEAPEST TOUR PACKAGE TO:
DOMICAN REPUBLIC: $850
MEXICO: $815
CUBA: $585
July, August & September
COLOMBO: $1150
CHENNAI: $1100
BENGALOORU: $1130
LONDON: $680
PARIS: $895
GERMANY: $695
வேறு எந்த விமான பிரயாணச்சீட்டு முகவர்களிடமும் கிடைக்காத மிகவும் குறைந்த கட்டணம்!!
• Scarborough • Ajax • Brampton • Mississauga • Etobicoke
3300 McNicoll Ave. Scarborough, ON, M1V 5J6
CONTACT SUTHA: 416 293 8700

# சிந்தைகவர் தந்தை



ஆடியமாவாசையை முன்னிட்டு
**19.07.2020**

தடுமாற்றம் இல்லாத தந்தை என்றும்
தாங்கிநிற்கும் அத்திவாரம் தமக்கு அல்ல
வடுவற்ற குடும்பத்தின் வற்றாத ஊற்று
வாட்டமுற்ற இல்லத்தின் வழிகாட்டி யவரே
நடுநிலைமை தவறாதே நற்பணி யாற்றும்
நாயகனாய் நற்கருணை கொண்டே நாளும்
கடுமையாய்ப் பணியாற்றிக் களிப்பாய்ப் பொருள்தேடிக்
கடும்பசி போக்கும் காதல ரிவரே.

அன்பான மனையாளை அகமகிழ வைத்தே
அரவணைக்கும் அன்பான அப்பா மட்டுமா
இன்பத்தைச் சேர்க்கின்ற இணையற்ற தலைவன்
ஈடில்லா வல்லமையும் எழிலுங் கொண்ட
வன்பகை யற்றதிந்த வல்லமைசேர் வாழ்முறையை
வாய்ப்பறிந் தேற்றே வழிந டத்தும்
நண்பனாய் நாயகனாய் நல்வழி காட்டும்
நற்றலைவன் என்னப்பா நல்லாசி ரியனுமே.

கற்கைநெறி யறியாத காவலன் எந்தை
காலமறிந்தே நல்லறிவு காட்டி நின்றார்
உற்றபொழுதில் ஊக்குவிக்கும் உத்த மனார்
ஊழலைக் கண்டாலோ உறுமி நிற்பார்
வற்றாத அன்புடனே வாழ வைத்த
வாய்மைநிறை எந்தையுடன் வாழ்காலம் சிறிதே
சொற்பவாழ் வென்றாலும் சொல்லாட்சி என்னுள்ளே
சோதியாய் மிளிர்வதனை சொல்லத்தான் முடியுமே.

வீடேதான் கோவிலென்றால் விக்ரகம் தந்தையே
வீட்டின் தலைவியோ விலைமதிப் பற்ற
தேடற்கரிய தெய்வ மகளாம் தாயோ
தேர்ந்தறிந்தே செய்செயலைச் செப்பமாய்ச் செய்தே
வாடவிடாதே வழிநடத்தும் வல்லமைசேர் நாயகியாய்
வாழ்க்கைத் துணைவியாய் வலிமைசேர் தாயாய்
பாடுபட் டுழைக்கின்ற பதிவிரதை யாமவளோ
பாட்டியாய் மாமியாய்ப் பலபதவி வகிக்கிறாளே.

எந்தையின் செயற்பாட்டை எடுத்துரைக்க வார்த்தையேது
என்றுமே தன்பிள்ளை ஏற்றமுற வேண்டுமென்றே
சிந்தையுடன் செயற்பட்ட செயல்வீர னவரின்
செப்புமொழி மட்டுமல்ல செய்து காட்டும்
விந்தை மனிதரவர் வீரமும் செறிந்திடவே
வில்லனாய் மாறாதே விருந்தோம்பி மகிழ்ந்தவரே
கந்தன் வழிபாட்டில் கவனம் செலுத்தியதால்
கருணைக் கடலாக காட்சி தந்தாரே.

பெண்ணுரிமை கேட்கின்ற கால மிது
பெண்ணுக்குப் பின்னாலே ஆணின் வழிகாட்டல்
எண்ணியே பார்க்காதே ஏற்றபடி பேசிடும்
எழுத்துரிமை யாளர்களே எடுக்கின்ற தீர்மானம்
அண்ணன் தம்பி அரவ ணைப்பும்
அப்பாவின் அன்புமொழி அகத்திருந் தகன்றிடுமோ
பெண்களின் கல்விக்குப் பேருதவி அப்பாவே
பெற்றவரை உதறியபின் பெருமைதான் காண்பீரோ.

முருகேசு மயில்வாகனன்

# இலங்கையின்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

சின்னமும் இருக்கும். அதற்கு நேரே வாக்காளர் புள்ளடி போடுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கும்.

அத்துடன் அந்த வாக்குச் சீட்டில் வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் 1 தொடக்கம் 25வரை காணப்படும். இந்த இலக்கங்களின் எண்ணிக்கையை அந்தத் தேர்தல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடும்.

## மாதிரி வாக்குச்சீட்டை பார்க்கவும்.

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிடும் கட்சிகளும்/சுயேச்சைக் குழுக்களும் அந்த மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை பத்துக்குக் குறைவாக இருந்தால், அவர்கள் அந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட மூன்று உறுப்பினர்களின் பெயர்களைக் கூடுதலாக வேட்பாளர் பட்டியலில் சேர்த்திருக்க வேண்டும். இதேபோல் அந்த மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை பத்துக்கும் இருபதுக்கும் இடையில் இருந்தால், அவர்கள் அந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட ஆறு உறுப்பினர்களின் பெயர்களைக் கூடுதலாக வேட்பாளர் பட்டியலில் சேர்த்திருக்க வேண்டும்.

இலங்கையின் தேர்தல் மாவட்டங்களில் மிகக்குறைவான 4 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் மாவட்டமாக திருகோணமலை உள்ளது. அதேபோல் அதிகூடிய 19 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் மாவட்டமாகக் கொழும்பு உள்ளது. இதனால் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளும்/சுயேச்சைக் குழுக்களும் 7 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலையும், கொழும்புத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளும்/சுயேச்சைக் குழுக்களும் 25 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**வாக்களிக்கும் முறை:** முதலாவதாக வாக்காளர்கள் தாங்கள் விரும்பும் கட்சியின் சின்னத்துக்கு அருகிலுள்ள பெட்டியில் புள்ளடியிட்டு தமது வாக்கைப் பதிவு செய்வர். பின்னர் அதே வாக்குச்சீட்டின் கீழ்ப்பகுதியில் தாம் ஆதரிக்கும் கட்சியின்/சுயேச்சை குழுவின் சார்பில் அந்தத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களில் தாம் விரும்பும் மூவரின் இலக்கங்கள் மீது புள்ளடி இடுவர். ஒரு வாக்காளர் தாம் விரும்பும் வேட்பாளர்களின் இலக்கத்தில் புள்ளடி ஒன்றும் இடாவிட்டாலும் பரவாயில்லை, அல்லது ஒருவரின், இருவரின் அல்லது மூவரின் இலக்கத்திலும் புள்ளடியிட்டாலும் இவ்வாக்கு செல்லுபடியாகும்.

**செல்லுபடியற்ற வாக்குகள்:** ஒரு வாக்காளர் வாக்குச்சீட்டில் தான் விரும்பும் கட்சி/சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு நேரே முதலில் புள்ளடி இடவேண்டும். இவ்வாறு புள்ளடி போடா விட்டாலோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்சி/சுயேச்சைக் குழுக்களுக்கு புள்ளியிட்டிருந்தாலோ அந்த வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகிவிடும். ஒரு வாக்காளர் கட்சி/சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு நேரே முதலில் புள்ளடி போடாமல் வாக்குச்சீட்டின் கீழே உள்ள தாம் விரும்பும் வேட்பாளர்களில் மூவருக்கு மட்டும் புள்ளடியிட்டிருந்தால் அந்த வாக்குச்சீட்டு செல்லுபடியாகாது.

ஒரு வாக்காளர் கட்சி/சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு நேரே முதலில் புள்ளடி போட்ட பின்னர் வாக்குச்சீட்டின் கீழே உள்ள தாம் விரும்பும் வேட்பாளர்களில் நால்வருக்குப் புள்ளடியிட்டிருந்தால் அவரது விருப்பு வாக்குச் செல்லாது என அறிவிக்கப்படும். ஆனால் அவர் அளித்த கட்சி/சுயேச்சைக் குழுவின் வாக்கு கணக்கில் எடுக்கப்படும். அதாவது அவர் விருப்பு வாக்கில் ஒருவருக்கும் புள்ளடியிடவில்லை எனக் கருதப்படும். இதனால் அவரின் வாக்கு கட்சிக்கு மட்டுமே போட்டதாக எடுத்துக்கொள்ளப்படும்.

**வாக்குகள் எண்ணப்படும் முறை:** தேர்தல் முடிவடைந்த பின்னர் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் முதலில் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகள் எண்ணப்படும். ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் கூடுதலாக வாக்குகளைப் பெற்ற கட்சி/சுயேச்சைக்குழு இற்கு அந்தத் தேர்தல் மாவட்டத்திற்குரிய முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு வழங்கப்படும். பின்னர் அந்தத் தேர்தல் மாவட்டத்தில் பதிவான வாக்குகளில் 5 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் போட்டியிலிருந்து விலக்கப் படும். இதன்பின்னர் அந்தத் தேர்தல் மாவட்டத்தில் விழுந்த செல்லுபடியான வாக்குகளின் கூட்டுத்தொகையில் இருந்து 5 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிகள்/சுயேட்சைக் குழுக்களின் வாக்குகள் கழிக்கப்பட்டு மீதமுள்ள வாக்குகளே நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்தெடுக்கச் செல்லுபடியான மொத்த வாக்குகளாகக் கணக்கில் எடுக்கப்படும்.

இந்த மொத்த வாக்குகள் எண்ணிக்கையை அந்தந்தத் தேர்தல் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒன்று குறைக்கப்பட்டு மீதமுள்ள எண்ணிக்கையால் பிரிப்பதன் மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்வதற்குத் தேவையான வாக்குகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். இந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை தெரிவுசெய்யத் தேவையான வாக்குகளின் எண்ணிக்கையால் ஒவ்வொரு கட்சி/சுயேட்சைக் குழு பெற்ற வாக்குகள் பிரிக்கப்பட்டு அந்தக் கட்சி/சுயேட்சைக் குழுவிற்கு உரிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிக்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு கட்சிக்கும் உரிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒதுக்கப்பட்ட பின்னர் இன்னமும் அந்தத் தேர்தல் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படவேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை மீதமாக இருந்தால், மேற்கூறியவாறு உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிக்கப்பட்ட பின்னர் மீதமுள்ள வாக்குகளில் ஆகக் கூடியவற்றைக் கொண்ட கட்சி/சுயேட்சைக் குழுவிற்கு அது வழங்கப்படும்.

இறுதியாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் எந்தெந்தக் கட்சி/ சுயேட்சைக் குழுவிற்கு எவ்வளவு இடங்கள் எனக் கணிக்கப்பட்ட பின்னர் அந்தக் கட்சிகள் சார்பில் விழுந்த விருப்பு வாக்குகள் எண்ணப்படும். கட்சி/ சுயேட்சைக்குழு இற்கு எவ்வளவு இடங்கள் கிடைத்துள்ளனவோ அதற்கு ஏற்ற ஒழுங்கில் கூடுதலான விருப்பு வாக்குப்பெற்றவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு 196 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர்.

**தேசிய வேட்பாளர் தெரிவு:**

இதுவரை 196 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எவ்வாறு தேர்தல் மாவட்டங்களில் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் பெறும் வாக்குகளின் விகிதாசாரப்படி தெரிவு செய்யப்பட்டனர் என்று பார்த்தோம். இப்போது மிகுதி 29 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றனர் என்று பார்ப்போம்.

நாடு முழுவதும் மொத்தமாக அதாவது 22 தேர்தல் மாவட்டங்களையும் சேர்த்து ஒவ்வொரு கட்சியும்/சுயேச்சைக் குழுக்களும் எவ்வளவு வாக்குகள் பெற்றனர் என்று கணிக்கப்படும்.

உதாரணமாக நாடு முழுவதும் உள்ள 16 மில்லியன் வாக்காளர்களில் செல்லுபடியான வாக்குகள் எண்ணிக்கை 14,500,000 என எடுத்துக்கொள்வோம். நாடு முழுவதும் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகள் பின்வருமாறு என எடுத்துக் கொள்வோம்.

| கட்சி / சுயேச்சைக் குழு | பெற்ற வாக்குகள் | வழங்கப்பட்ட உறுப்பினர்கள் |
|---|---|---|
| கட்சி A | 5,000,000 | 10 |
| கட்சி B | 3,800,000 | 7+1 |
| கட்சி C | 3,350,000 | 6+1 |
| கட்சி D | 2,000,000 | 4 |
| கட்சி E | 250,000 | 0 |
| சுயேச்சைக் குழு F | 100,000 | 0 |
| | **14,500,000** | **29** |

நாடு முழுவதும் விழுந்த செல்லுபடியான 14,500,000 வாக்குகளை 29 உறுப்பினர்களின் எண்ணிக்கையையால் பிரிக்க, ஓர் உறுப்பினர் தெரிவு 500,000 வாக்குகள் தேவை எனக் கணிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கட்சியும்/சுயேச்சைக் குழுக்களும் பெற்ற மொத்த வாக்குகளை 500,000ஆல் பிரிக்க வரும் முழு எண் அளவு உறுப்பினர்களது எண்ணிக்கை கட்சிகள்/சுயேச்சைக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

கட்சிகள் சுயேச்சைக் குழுக்களுக்கு ஒதுக்கப்படாமல் 29 உறுப்பினர்களில் மீதி உறுப்பினர்கள் இருந்தால் அது மேற்கூறிய உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிக்கப்பட்ட பின்னர் மீதமுள்ள வாக்குகளில் அதிகம் உள்ள கட்சிகள்/சுயேச்சைக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

ஒவ்வொரு கட்சியும் தேசியப்பட்டியல் தெரிவு செய்ய என ஆகக்கூடியது 29 பேர்களைக் கொண்ட நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கலாம். ஆனால் அவர்கள் தமக்குக் கிடைத்த தேசிய வேட்பாளர்களை அவர்கள் சமர்ப்பித்த தேசிய வேட்பாளர் பட்டியலில் இருந்தோ அல்லது தேர்தல் மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இருந்தோ தெரிவு செய்யலாம்.

**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்:**

வாக்குகள் எண்ணப்படும் முறையை விளக்க 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் கணிப்பை பார்ப்போம்.

அட்டவணை 3இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்ட 5 கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள் குறியீட்டு வடிவில் கட்டம் 1இல் முதல் 7 வரிசைகளில் மேலிருந்து கீழாகக் காட்டப்பட்டுள்ளன. எட்டாவது வரிசையில் மிகக் குறைவான எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்ற எல்லாக் கட்சிகளையும் சுயேட்சைக் குழுக்களையும் சேர்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது. கட்டம் 2இல் ஒவ்வொரு கட்சி/சுயேட்சைக்குழு உம் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை உள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் உள்ள பதியப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 2015இல் 529,239. அதில் 64.40% ஆனோர் வாக்களித்திருந்தனர். அதிலும் செல்லுபடியற்ற 7.48%ஆன வாக்குகள் போக மீதமுள்ள மொத்த வாக்குகள் 300,309 ஆகும். அதை 100% ஆகக்கொண்டு பார்த்தால் 5% வாக்குகளின் எண்ணிக்கை 15,015 ஆகும்.

தேர்தல் விதிமுறைப்படி 15,015இற்குக் குறைவான வாக்குகளைப் பெற்ற கட்சிகள் /சுயேட்சைக் குழுக்கள் நீக்கப்படு கின்றன (கட்டம் 3). இவைபோக மீதமுள்ளவை ஐந்து கட்சிகளே. இந்த ஐந்து கட்சிகளும் மொத்தமாகப் பெற்ற வாக்குகள் 290,165. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு ஏழு உறுப்பினர்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் விதிமுறைப்படி அதில் ஓர் உறுப்பினர் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற ITAKஇற்கு வழங்கப்படுகிறது.

290,165 வாக்குகளின் எண்ணிக்கையை மீதமுள்ள ஆறு உறுப்பினர்களின் எண்ணிக்கையால் பிரித்தால் ஓர் உறுப்பினர் தெரிவுக்கு 48,361 வாக்குகள் வேண்டும் (கட்டம் 4). தற்போது 5%இற்குக் கூடிய வாக்குகளைப் பெற்ற ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகளை 48,361ஆல் பிரித்துப் பார்ப்போம் (கட்டம் 5).

ITAK மட்டும் 4 முழு எண்ணைப் பெறுவதால் அதற்கு மேலும் 4 உறுப்பினர்கள் வழங்கப்படுகிறது. இத்துடன் யாழ்ப்பாணம்

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

# இலங்கையில் கொரோனா இரண்டாம் அலை..?

**– விகிர்தன் –**

இலங்கையில் கட்டுப்பாட்டிலிருந்த கொரோனா வைரஸ் பரவல் கடந்த சில தினங்களாக அதிகரித்து வருகின்றது. ஆரம்பத்தில் சமூக மட்டத்தில் பரவியிருந்த கொரோனா தொற்று கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. தொற்றால் பாதிக்கப்பட்டோர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று கட்டம் கட்டமாகக் குணமடைந்து வெளியேறினர். பின்னர், சில நாட்களில் வெலிசர கடற்படை முகாமிலிருந்த கடற்படையினருக்கு தொற்று ஏற்பட்டு அது அதிகரிக்கத் தொடங்கியது. அந்த முகாமிலிருந்து விடுமுறையில் சென்ற கடற்படை வீரர்கள் உடனடியாக வரவழைக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களின் குடும்பத்தினர், அவர்கள் சந்தித்த உறவினர், நண்பர்கள் அனைவரும் கண்டறியப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர். இதனால் சமூகத்தில் தொற்று பரவுவது தடுக்கப்பட்டது. தொற்றுக்கு உள்ளான கடற்படையினர் பெரும்பாலும் குணமடைந்து வருகின்றனர்.

தொடர்ந்து, நாளாந்தம் கொரோனா தொற்றுள்ளவர்களாக பதிவானோர் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியவர்களாகவே இருந்தனர். விமான நிலையத்திலேயே அவர்கள் பரிசோதனை செய்யப்பட்டு தொற்று அடையாளம் காணப்பட்டோர் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டனர். கொரோனா தொற்று அடையாளம் காணப்படாதவர்களும் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தல் மையத்தில் கண்காணிக்கப்பட்ட பின்னரே அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தற்போது கொரோனா தொற்றாளர்களாக அதிகளவில் இனங்காணப்பட்டு வருகின்றவர்கள் கந்தக்காடு புனர்வாழ்வு முகாமிலிருந்தோர். போதைப்பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்டோருக்கானதே இந்தக் கந்தக்காடு முகாம். பொலநறுவை மாவட்டத்தில் வெலிகந்தையில் அமைந்துள்ள கந்தக்காடு புனர்வாழ்வு முகாமில் நாடு முழுவதிலும் போதைப்பொருளுக்கு அடிமையானோர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மருத்துவ மற்றும், மனநல சிகிச்சைகள் அங்கு வழங்கப்பட்டு வருகின்றன.

சுமார் 600 பேர் வரை கந்தக்காடு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த முகாமில் உள்ளோர் அனைவருக்கும் தற்போது பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களைப் பார்ப்பதற்காக சென்றுவந்த உறவினர்களின் குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கந்தக்காடு முகாமில் பணியாற்றியோர், சிகிச்சையளித்தோர் எனப் பலருக்கும் தற்போது சிக்கல் ஏற்பட்டுள்ளது. அங்கு ஆலோசகராகப் பணியாற்றிய பெண்ணொருவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது. அவரின் குடும்பத்தினர், நண்பர்கள் முதலானோர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர் பயணம் செய்த வாகனங்களில் இருந்தோர் இணங்காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர் பயணித்த பஸ்ஸில் பயணித்த சக பயணிகளும் அடையாளம் காணப்பட்டு கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். மற்றுமொரு ஆலோசகருக்கும் தொற்று அடையாளம் காணப்பட்டு அவருடன் தொடர்பைப் பேணிய 300 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் 70 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

வடக்கில் யாழ்ப்பாணத்தில் மூன்று குடும்பங்களும், மன்னாரிலும் மூன்று குடும்பங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இக்குடும்பங்களைச் சேர்ந்தோர் கந்தக்காடு புனர்வாழ்வு முகாமிலுள்ளோரைப் பார்வையிடச் சென்று வந்தோரெனத் தெரிவிக்கப்படுகின்றது. இனிவரும் நாட்களில் வடக்கிலும் கொரோனா தொற்றுப் பரவல் ஏற்படலாம் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலைமைகள் காரணமாக மீண்டும் நாட்டில் ஊரடங்கு சட்டம் நடைமுறைக்கு வருமா? என்கின்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த 29ஆம் திகதி நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டு, 6ஆம் திகதி மாணவர்களுக்கான அனுமதி வழங்கப்பட்டு, கற்றல் நடவடிக்கைகளும் தொடங்கப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் பாடசாலைகள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. 13ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொரோனா பரவல் கட்டுப்பாட்டிற்குள் வராவிட்டால் மீண்டும் தொடர்ச்சியாகப் பாடசாலைகள் மூடப்படும் நிலை ஏற்படலாம். அதேபோல், அரசாங்க அலுவலகங்களுக்கும் இதே நிலை வரலாம். ஊரங்கு உத்தரவு மீண்டும் நடைமுறைக்கு வந்தால் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேலும் பாதிப்பிற்கு உள்ளாகலாம். இதுவொரு அச்சமூட்டும் நிலைமையாகவே உள்ளது.




இலங்கையில் கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி நடைமுறைக்கு வந்த தொடர்ச்சியான ஊரடங்கு உத்தரவு பின்னர் கட்டம் கட்டமாக தளர்த்தப்பட்டு கடந்த யூன் மாதம் 28ஆம் திகதியுடன் முழுவதுமாக தளர்த்தப்பட்டது. மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து தடைகள் நீக்கப்பட்டு பஸ் மற்றும், ரயில் போக்குவரத்து வழமை நிலைக்குத் திரும்பின.

கொரோனா பரவல் காரணமாக அமலில் இருந்த அனைத்துத் தடைகளும் நீக்கப்பட்ட போதும் சுகாதார நடைமுறைகளை பொதுக்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால், மக்கள் அதனை முறையாக கடைப்பிடிக்கத் தவறினர். பலர் முகக் கவசம் அணிவதையும் புறக்கணித்தனர். பஸ்களில் இடைவெளி பேணுவதும், முகக் கவசம் அணிவதும் புறக்கணிக்கப்பட்டது. தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளும் நடைமுறையை மக்கள் பேணவில்லை என்றே கூற வேண்டும்.

இது இலங்கையில் மட்டுமல்ல, உலகில் பல நாடுகளிலும் கொரோனா கட்டுப்பாட்டின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட தளர்வுகளைத் தொடர்ந்து மக்கள் இவ்வாறே கவனக் குறைவாக நடந்துகொண்டுள்ளனர். இதனால் சில நாடுகளில் கொரோனா தொற்றின் பரவல் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. அயல் நாடான இந்தியாவில் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

உலகில் கொரோனா பரவல் மோசமான நிலையில் உள்ள அமெரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளுக்கு அடுத்ததாக மூன்றாவது இடத்தில் இந்தியாவே உள்ளது. நான்காம் இடத்தில் ரஸ்யா உள்ளது. ஏனைய சில நாடுகள் கொரோனா பரவல் கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டதாகக் கூறி தளர்வுகளை அறிவித்தன. தற்போது அந்நாடுகளில் திறக்கப்பட்ட பாடசாலைகள் மீண்டும் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் இப்போது நாடு முழுவதிலும் முடக்க நிலையை அறிவித்துள்ளது. கிழக்காபிரிக்க நாடான கென்யாவில் பாடசாலைகள் அனைத்தும் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மோசமான கொரோனா பரவல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைவான பாதிப்பை எதிர்கொண்டுள்ள கென்யா தற்காப்பு நடவடிக்கையாக இதனை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா பாதிப்பின் பின்னர் அதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த விட்டதாகக் கூறி தளர்வுகளை மேற்கொண்ட நாடுகள் பலவற்றிலும் மீண்டும் கொரோனா பரவல் அதிகரிக்கத் தொடங்கியதும் மீண்டும் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. எந்தக் கட்டுப்பாடுகளை தளர்தினாலும் சுகாதார வழிமுறைகளை தளர்த்துவது மிக ஆபத்தானது. சுகாதார வழிமுறைகளை பின்பற்றி தங்களை தற்காத்துக் கொள்வது ஒவ்வொருவரினதும் பொறுப்பு மிக்க கடமையாகும். இன்று மீண்டும் கொரோனா தாக்கம் அதிகரித்துள்ளமையினை கொரோனாவின் ‘இரண்டாவது அலை’ என்று குறிப்பிடுகின்றனர். உண்மையில் இது கொரோனா வைரஸ் பதுங்கியிருந்து இரண்டாவது முறையாக தாக்குவது என்பது பொருள் அல்ல. கொரோனா சற்று கட்டுப்பாட்டிற்குள் வந்ததும், சுகாதார நடைமுறைகளை கைவிடுவதால் மீளவும் பரவும் நிலையே ‘இரண்டாவது அலை’.

கொரோனா வைரஸ் ஏதோவொரு கணத்தில் தன்பாட்டில் மறைந்து போகும் ஒன்றல்ல. மக்களின் சுகாதார நடைமுறையின் மூலமாகவே அதனை முற்றாகக் களைய முடியும். கொரோனாவிலிருந்து மீண்டாலும் அதனால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுவது என்பது கடினமானதாகவே அமையும். உலகளவில் கொரோனா தொற்றால் மிகக் குறைவான பாதிப்பையே இதுவரை எதிர்கொண்டு வந்துள்ள இலங்கை மக்களும் இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

World Class Realty Point Brokerage
Affordable Homes ♦ Pre-Construction Condos
Investment Properties
Search Here - Find Here
HousePrice.ca
www.HOUSEPRICE.ca
Right Realtor Right Price
Sam Surendran
Sales Representative
Dir: 647.350.0220
World Class Realty Point Brokerage
55 Lebovic Ave, #C115, Toronto, ON M1L 0H2. Tel: 416.444.7653

# வடமாகாணக் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கான சில பின்னணிகளும் ஆலோசனைகளும்

ந. அனந்தராஜ், B.A.(Hons.) - M.A
Dip-In-Edu.,Dip-In-Journalism, SLPS, SLEAS

## பகுதி-4

**கல்வித்தர வரிசையில் ஒரு மாகாணத்தை பின்தள்ளக் கூடிய சித்தியின்மை வீதத்தின் போக்கு:**

கல்வி அடைவுமட்டம் தொடர்பான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படும் பொழுது, பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாதோர் வீதம் பிரதானமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். பல பாடசாலைகள் இவற்றை மறைத்து 9A அல்லது 8A சித்திகளைப் பெற்ற ஒருசில மாணவர்களைப் பாராட்டிப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துகின்ற ஒரு போக்கை வடமாகாணத்தில் பார்க்க முடிகின்றது. முன்னோடிப் பாடசாலைகள் என்று தம்மைப் பிரபல்யப்படுத்தும் தேசியப் பாடசாலைகளிலும்கூட கணிசமான அளவில் சித்தியடையாதோர் வீதம் காணப்படுகின்றன என்ற உண்மைகள் பலருக்குத் தெரிவதில்லை. பின்வரும் அட்டவணை இலக்கம் 4இல், கடந்த 12 ஆண்டுகளாக அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாதோரின் வீதம் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை:03**

**வடக்கு கிழக்கு தென் மாகாணங்களில் 2008–2019 காலப் பகுதியில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையாதோர் வீதம்:**

2009 ஆண்டுகளில் யுத்தம் மிகவும் மோசமாக இடம்பெற்றதன் விளைவை வடக்குக் கிழக்கு மாகாணத்தின் பரீட்சைப் பெறுபேறுகளில் சகல பாடங்களிலும் சித்தியின்மை வீதமானது அட்டவணை இல.03இல் காட்டப்பட்டுள்ளன. அதற்கமைய யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து வந்த 2010ஆம் ஆண்டில் மிக அதிக அளவிலான மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் சித்திபெறத் தவறிவிட்டனர். ஆனால் பின்னர் நாட்டின் நிலைமையில்

| ஆண்டு | வடக்கு | கிழக்கு | தென் | தேசிய நிலையில் |
|---|---|---|---|---|
| 2008 | 3.50 | 5.23 | 7.53 | 6.22 |
| 2009 | 2.71 | 4.95 | 8.17 | 6.98 |
| 2010 | 4.83 | 3.96 | 5.94 | 6.31 |
| 2011 | 3.58 | 3.80 | 5.42 | 4.74 |
| 2012 | 2.78 | 2.85 | 4.48 | 4.13 |
| 2013 | 2.39 | 2.26 | 3.89 | 3.67 |
| 2014 | 3.75 | 2.27 | 2.39 | 3.17 |
| 2015 | 4.53 | 2.95 | 2.07 | 3.18 |
| 2016 | 4.47 | 3.69 | 1.86 | 3.11 |
| 2017 | 3.46 | 3.08 | 1.23 | 2.46 |
| 2018 | 2.55 | 2.18 | 1.11 | 2.00 |
| 2019 | 2.63 | 2.48 | 1.60 | 2.29 |

மாற்றங்கள் வரத் தொடங்கியதும் சித்தியின்மை வீதம் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. ஆயினும் வடமாகாணத்தின் அனைத்துப் பாடங்களினதும் சித்தியின்மை வீதமானது ஏனைய மாகாணங்களினதும், தேசிய நிலையினதும் வீதத்தைவிட அதிகமாகவே உள்ளதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை, வடமாகாணத்தில் 2018இல் சித்தியின்மை 3.55 வீதமாகவும், 2019இல் 2.63 வீதமாகவும் இருக்க தேசிய நிலையில் இது முறையே 2.00 வீதமாகவும், 2.29 வீதமாகவும் இருந்தது.

ஆயினும் வடமாகாணத்தில் 2015இல் 4.53 வீதமாகவும், 2016இல் 4.47 வீதமாகவும், 2017இல் 3.46 வீதமாகவும் இருந்து வந்த சித்தியின்மை வீதத்தைக் குறைப்பதற்காக, சித்தியடைவதற்கான எல்லைப் புள்ளியில் இருக்கும் மாணவர்களின் சித்தியடையும் வீதத்தை கூட்டுவதற்காக ஒரு செயல் திட்டம் வடமாகாணக் கல்வி அமைச்சராக இருந்த கலாநிதி க.சர்வேஸ்வரன் அவர்களினால் 2018,2019 ஆகிய ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டதால் சித்தியின்மை வீதம் முன்னைய ஆண்டுகளைவிடக் கணிசமாகக் குறைவடைந்தது.

இந்தத் துரிதமான நடவடிக்கை வட மாகாணக் கல்வித்திணைக்களம் மூலம் முன்னெடுக்கப்படாவிட்டால், வடக்கில் சித்தியின்மை வீதம் மேலும் அதிகரித்திருக்கும். இந்தச் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, 12 வலயங்களுக்கும் நேரடியாகச் சென்று அதிபர்களுக்கான விளக்கங்களை வழங்கியதில் வட மாகாணக் கல்விப்பணிப்பாளர் மற்றும் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் ஒன்றிணைந்து முயற்சிகளை எடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற செயல்திட்டம் எதிர்வரும் காலங்களிலும் பாடசாலை அதிபர்களினால் முன்னெடுக்கப்பட்டு வந்தால் அப்பாடசாலைகளின் சித்தியின்மை வீதம் குறைவடையும்.

அதேவேளை பல பாடசாலைகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் EMIS தரவுத் தளத்தில் தமது க.பொ.த. சாதாரண தரத்தில் கற்கும் மாணவர்களின் தவணைப் புள்ளிகளைத் தரவேற்றாது விட்டதால் உண்மையான தகவலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என மாகாணக் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்தார். இது தொடர்பாக EMIS தரவுத் தளத்தில், பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"பாடசாலைகளில் இருந்து தரவுகளைப் பெறுவதற்கு வலயங்கள் கையாண்ட பொறிமுறைகள் வேறுபட்டமை, தரவுத் தளத்தினைக் கையாளுவதில் ஏற்பட்ட தொழில்நுட்ப இடர்ப்பாடுகள், சில வலயங்கள் உரிய நேரத்தில் தரவுத் தளங்களைப் பூரணப்படுத்துவதில் எதிர்கொண்ட சவால்கள், தரவுகள் சரியான முறைமையில் தரவேற்றம் செய்யப்படாமையால் தரவுகளைச் சேர்க்க முடியாமை போன்ற பல காரணங்களால் இப்பொறிமுறை சவால்மிக்கதாயிற்று."

எனவே அதிபர்களின் இவ்வகையான பாராமுகமான செயற்பாடுகளினால் ஒரு மாகாணத்தின் கல்விச் செயற்பாடே பாதிக்கப்படுகின்றது என்பதைச் சம்பந்தப்பட்ட அதிபர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவை போன்ற தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாது பார்த்துக் கொள்ளவேண்டும்.

பாடசாலைகளில் சித்தியின்மை வீதம் அதிகரிக்கும் பொழுது மாகாணத்தின் கல்வித்தர வரிசையும் குறைந்து செல்வதால் மாகாண ரீதியில் கல்வி அடைவுமட்டம் பின்நோக்கித் தள்ளப்படும். எனவே சித்தி பெறுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க எடுக்கும் முயற்சியைப் போன்று சித்தியின்மை வீதத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் அதிபர்களும், கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களும் மேற்கொள்ளவேண்டும்.



ஆனால், தென்மாகாணத்தில் சித்தியடைவோர் வீதம் அதிகரித்து வந்தமைக்கு ஏற்ப சித்தியடையாதோர் வீதமும் அதிகளவில் குறைவடைந்து 2008ஆம் ஆண்டில் 6.22 வீதமாக இருந்த சித்தியின்மை 2019ஆம் ஆண்டில் 1.60 வீதமாகக் குறைக்கக்கப்பட்டுள்ளமையானது, தென் மாகாணத்தின் துரிதமான கல்வி அபிவிருத்திச் செயற்பாட்டை எடுத்துக் காட்டுகின்றன. இந்தநிலையில் தென் மாகாணக் கல்வி அமைச்சும், மாகாணக் கல்வித் திணைக்களமும் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரிப்பதற்கான ஒன்றிணைந்த வேலைத் திட்டத்தைக் கடந்த பத்து ஆண்டுகளாகச் செயற்படுத்தி வருகின்றன.

இங்கு ஏனைய எட்டு மாகாணங்களையும் விடத் தென்மாகாணமே எல்லோரையும் கவனத்தில் ஈர்த்துள்ளமையால், இந்த மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதன் மூலம் தென்மாகாணத்தை ஒரு முன்னோடியான மாகாணமாக (Pilot) எடுத்து, அந்த அனுபவங்களைக் கொண்டு வடக்குக் கிழக்கிலும் துரிதமான கல்வி அபிவிருத்தியை முன்னெடுக்கலாம்.

(தொடரும்)

## மாற்றம் நல்லது

**உங்கள் மனசுக்கு சில விடயங்கள் சரியில்லை என்று நினைகிறீர்களா?**

குடும்பத்தோடு நேரம் செலவழிக்க முடியவில்லை, நடைபயிற்சி தொடங்கினோம்; ஆனால் தொடர முடியவில்லை, நல்ல புத்தகம் வாங்கினோம்; ஆனால் படிக்க முடியவில்லை, வேறு வேலை தேடுகிறோம்; கிடைக்கவில்லை, கல்யாணத்துக்குப் பெண்ணோ / பையனோ; கிடைக்கவில்லை, புகை/மது பழக்கத்தை நிறுத்த முடியவில்லை,இப்படி ஏதாவதொரு 'இல்லை' நமக்கு எப்போதுமே உண்டு.

இல்லைகளை இல்லாமல் ஆக்க நீங்கள் மனதளவில் முதலில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். ஒரு புகழ்பெற்ற மனிதரின் அறிவுரை உங்களுக்கு மிகவும் உதவும்.

கடந்த 33 வருடங்களாக; தினமும் காலையில் கண்ணாடியை பார்த்து என்னை நானே கேட்டுக்கொள்வது "இந்த நாள் உன்னுடைய கடைசி நாளாக இருந்தால் இன்று செய்துகொண்டு இருப்பதை தொடர்ந்து செய்வாயா?"

எப்போதெல்லாம் 'இல்லை' என்ற பதில் தொடர்ந்து சில நாட்கள் வருகிறதோ, அப்போதே எனக்குத் தெரியும் நான் எதையாவது மாற்ற வேண்டும் என்று. - ஸ்ரீவ் ஜொப்ஸ்"


நாமும் சிலவற்றை மாற்ற முயலலாம். பல 'இல்லை'களை தவிர்த்து, சில சின்ன 'இல்லை'களோடு வாழலாம்.

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் நாவலர் நெடுஞ்செழியன் பெயரில் உலகளாவிய தமிழ் விருது

உலகப் புகழ்பெற்றதும் 193 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்டதுமான கனடா நாட்டின் ரொறொன்ரோ பல்கலைக்கழகம், நாவலர் நெடுஞ்செழியன் பெயரால் உலகளாவிய தமிழ் விருது ஒன்றை நிறுவியிருக்கிறது. இதற்கான அதிகார பூர்வ ஒப்பந்தம் ஒன்றை கனடா வாழ் தமிழ் சமூகத்துடன் கையெழுத்திட்டிருக்கும் செய்தியை, ‘இந்து தமிழ் திசை’ பிரத்தியேகமாக வழங்குகிறது.



கனடா நாட்டுக்கு 4 பிரதமர்களையும் 14 உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும் நோபல் பரிசு பெற்ற 10 ஆளுமைகளையும் 4 பிற நாட்டுத் தலைவர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியது ரொறொன்ரோ பல்கலைக்கழகம். மேலும், கற்பித்தலுக்கும், ஆராய்ச்சிக்கும் உரிய பல்கலைக் கழகமாக இது விளங்குவதால், உயர்கல்வி, ஆய்வு மாணவர்களுக்கும் மொழிசார் புலமையாளர்களுக்கும் போதிய வாய்ப்புகளை அளித்துவருகிறது. தமிழ் மொழிக்கும் உயரிய முக்கியத்துவத்தை இப்பல்கலைக்கழகம் வழங்கிவருகிறது. அதற்கான காரணமும் இல்லாமல் இல்லை.

## தமிழ் வளர்க்கும் நாடு

விளம்பரம்
VLAMBARAM™
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

1948ஆம் ஆண்டு தொடங்கி தமிழர் கனடாவில் குடியேறி வாழத் தொடங்கினர். 1970ஆம் ஆண்டில் சுமார் 5 ஆயிரம் தமிழ்க் குடும்பங்கள் குடியுரிமை பெற்றிருந்தன. 1980இல் அது மேலும் பலமடங்கு அதிகரித்தது. இலங்கையில் இருந்தும் இந்தியாவிலிருந்தும் கனடாவில் குடிபெயர்ந்து வாழும் தமிழ்க் குடும்பங்களின் எண்ணிக்கை இன்று 3 லட்சத்தைக் கடந்துள்ளது. கனடாவின் வளர்ச்சியில், அங்கே குடியேறி வாழும் தமிழரின் பங்களிப்பும் அவர்கள் காட்டிவரும் சமூக அக்கறையும் அந்நாட்டவரால் பெரிதும் மதித்துப் போற்றப்பட்டு வருகிறது.



எம்.ஜி.ஆருடன் நாவலர் நெடுஞ்செழியன்

## தமிழ் மரபு மாதம்

கனடா நாட்டின் நாடாளுமன்றம் 2016ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தைத் தமிழ் மரபு மாதமாக அறிவித்தது. அதன்படி 2017ஆம் ஆண்டிலிருந்து ஜனவரி மாதம் தமிழ் மரபு மாதமாக கனடா முழுவதும் கொண்டாடப் படுகிறது. கனடா நாட்டின் அரசு, இது சார்ந்த கொண்டாட்டங்களுக்கு நிதி வழங்கியும் ஊக்குவிக்கிறது. அத்துடன், உலகில் ஒரு பல்கலைக்கழகம் வருடா வருடம் தமிழ் மரபையும் பண்பாட்டையும் போற்றி விழா எடுக்கிறது என்றால் அது கனடாவில் உள்ள 96 பல்கலைக் கழகங்களில் முதலிடம் வகிக்கும் ரொறொன்ரோ பல்கலைக்கழகம் மட்டுமே.

## முதல் உலகளாவிய விருது

தற்போது மேலும் ஒரு இனிய செய்தியாக, தமிழின் மேன்மையைப் பரப்புவதில் தன் வாழ்நாளின் பெரும்பகுதியைச் செலவிட்ட ஒருவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்க முடிவுசெய்தது. இதற்கான ஒப்பந்தத்தை, கனடாவாழ் சமூகத்துடனும் இந்த விருதை நிறுவிடப் பெரும் தொகையை வைப்பு நிதியாக வழங்கிய தமிழ் மருத்துவருடனும் (பெயரை வெளியிட அவர் விரும்பவில்லை) கையெழுத்திட்டுள்ளது.

இந்த விருது உலகளாவிய ஒன்று. இலக்கணம், இலக்கியம், மொழியியல், தமிழ்க்கல்வி ஆகிய துறைகளில் ஆய்வுகள் மேற்கொண்டு, தமிழின் மேன்மைக்கு முதலிடம் தந்து, வாழ்நாளில் தமிழ்த் தொண்டாற்றிவரும் ஒருவருக்கு இந்த விருது வழங்கப்படும். கனடா நாட்டின் ரொறொன்ரோ பல்கலைக்கழக வளாகத்தின் நடுக்கூடத்துக்கு விருது பெறுபவர் வரவேற்கப்பட்டு, அவையோர் முன்னிலையில் கௌரவிக்கப்படுவார். இவ்விருது, ரொறொன்ரோ பல்கலைக் கழகத்தின் பாராட்டுச் சான்றிதழ், விருது, பணமுடிப்பு ஆகியவை அடங்கியது.

## நூற்றாண்டு நாயகரை நினைவில் நிறுத்த…

அறிஞர் அண்ணா திமுக கழகம் கண்டபோது அதில், துணைப் பொதுச் செயலாளர், பின்னர் பொதுச்செயலாளர், கட்சிப் பத்திரிகையின் ஆசிரியர், சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர், கட்சி அவைத்தலைவர், அமைச்சரவையில் தனக்கு அடுத்தஇடம் எனப் பெரிய



மா.பொ.சி. உடன் நாவலர் நெடுஞ்செழியன்

பொறுப்புகளை நெடுஞ்செழியனுக்கு அளித்து அழகு பார்த்தார் அண்ணா. ‘தம்பி வா... தலைமையேற்க வா!’ என்று அவரால் அழைக்கப்பட்டவர்.

தமிழிலக்கணத்தில் வல்லவரான நெடுஞ் செழியன், இலக்கியம், வரலாறு, அரசியல் அறிவியல் ஆகியவற்றில் அருவிபோல் மேடைத்தமிழில் முழங்கியதால் அவரை ‘நாவலர்’ என்ற பட்டம்தேடி அடைந்தது. கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டிருந்தபோதும், ராமாயணம், மகாபாரதம், பெரியபுராணம் ஆகியவற்றில் மணிக்கணக்கில் உரையாற்றும் அவரது வல்லமை கண்டு தமிழகம் வியந்திருக்கிறது. பெரியாரிடம் தொடங்கி அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா எனப் பயணித்த அவரது அரசியல் பயணத்தில், தமிழ் வளர்த்த அறிஞராக நாவலர் நெடுஞ்செழியனின் தமிழ்ப் பணி போற்றுதலுக்குரியது. பேசும் கலை வளர்த்த நாவலர் நெடுஞ்செழியனின் பேச்சு மொழியும் தமிழ்ப் பணியும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்பட வில்லை. அந்தக் குறையைப் போக்கும் வகையில் நாவலரின் பெயரில் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படும் இந்த விருது ‘தகைசால் தமிழ் இலக்கிய விருது’ என அழைக்கப்படும்.

## முதல் விருது எப்போது?

முதல் விருது, ரொறொன்ரோ பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை இயங்கத் தொடங்கிய பின்னர், அதன் தலைமைப் பேராசிரியரின் வழிகாட்டலில் தேர்வுக்குழு அமைத்து வழங்கப்படும். உலகத்தின் எந்தப் பகுதியில் இருந்தும், தமிழ்ப் பணியாற்றிய தகுதியின் அடிப்படையில், அந்த ஆண்டுக்கான விருதாளர் தெரிவு செய்யப்படுவார். புகழ்பெற்ற ஓர் அயல்நாட்டுப் பல்கலைக்கழகத்தால் உலகளாவிய தமிழ் விருது வழங்கப்படுவது இதுவே முதல் முறை



அண்ணா, கலைஞருடன் நாவலர்

என்ற வகையில் முக்கியத்துவம் பெறும் இவ்விருதானது, நாவலர் நெடுஞ் செழியனின் நூற்றாண்டு நிறைவில் தொடங்கி ஆண்டுதோறும் வழங்கப்பட இருக்கிறது. இந்த விருதை நிறுவிய பெயர் வெளியிட விரும்பாத தமிழருக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது.

நன்றி: www.hindutamil.in


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, • முதுகு நோவு
• வாகன விபத்து • மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்


Dr. J. Mohan
D.H.M.S, N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4


# வாழுமோ இந்த அரசு!



ஆங்கில ஆட்சி அகன்றபின் நாடு
 அடைந்த சுதந்திரம் நம் அனைவருக்கும்
பொதுவெனக் கொண்டோம் ஆனால்
 அடைந்தபயன் இன்று என்ன கண்டோம்


ஏங்கித் தவிப்பவன் ஏய்த்து உழைப்பவன்
 எண்ணிக்கை உயருதே நாட்டில்
எவ்வகையில் எடுத்துரைப்பேன் இதை
 என் பாட்டில்
மூன்று பத்தாண்டு காலம் நடந்து முடிந்தபோரால்
 முடிவு என்னதான் நாம் கண்டோம்
மூன்று இலட்சம் பேரை இழந்தோம்
 ஏதிலிகளாகவும் ஆனோம்

நீண்டு போகுதே ஏழ்மை மேலும் அங்கே
 நின்மதி இல்லை என்பதை நினைக்க நெஞ்சு பதறுதே
வயிற்றை நிரப்பக் கூட வேலை வாய்ப்பு
 வசதி கூட இல்லையே

உழைப்பவன் உழைப்பினை உறிஞ்சிட அங்கு
 உட்புகுந்துள்ளதே காடையர் கூட்டம்
வீட்டினுள் நுளைந்து உள்ள பொருட்களையும்
 கொள்ளை அடிக்கிறதே மறு கூட்டம்

கள்ளக் கடத்தல், போதை வஸ்துக் கடத்தல்
 பெண்கள் கடத்தல் போன்று என்னென்னவோ
எல்லாம் நடக்கிறதே அங்கே இதற்கு
 கொஞ்சம் கூட அங்கில்லை அச்சம்

அற்ப மனிதரின் அவலப் போக்கினை அங்கு
 அழித்திடப் போடவில்லை அரசு சட்டம்
அதற்கு அரசியல் வாதிகளும் துணை போகின்றனரே
 என்று அறிந்திட வேதனை மறுபக்கம்
என்று வீழுமோ இந்த அரசு என அங்கு
 ஏங்கித் தவிக்கிறான் மனிதன்


கவிநாதம் பரந்தாமன்

# இலங்கையின்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

தேர்தல் மாவட்டத்திற்குரிய ஏழு உறுப்பினர்களில் 5 பேர் (ஏற்கனவே 1, இப்பொழுது 4) கட்சிகளுக்கு ஒதுக்கப் பட்டுவிட்டனர். மீதமுள்ள 2 உறுப்பினர்களும் கட்டம் 5இல் அதி கூடிய மீதி வாக்குகள் உள்ளவர்களான EPDP (0.6251)க்கு ஒன்றும், UNP (0.4141)க்கு ஒன்றுமாக வழங்கப்பட்டது.

அந்த வாக்குச் சீட்டில் வேட்பாளர்களுக் குரிய இலக்கமாக 1 தொடக்கம் 10வரை எழுதப்பட்டிருக்கும். வாக்காளர்கள் வாக்குச்சீட்டிலுள்ள 33 பெட்டிகளில் (கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள்) ஒன்றிற்கும், வாக்குச் சீட்டிலுள்ள வேட்பாளர்களுக்கு உரிய இலக்கங்கள் 1 இலிருந்து 10வரை உள்ளவற்றில் மூன்று இலக்கங்கள் மீதும் புள்ளடி இடவேண்டும். தமது தெரிவு செய்த கட்சிக்குரிய வேட்பாளர்களின் பெயர்கள் வாக்கு சீட்டில் இருக்காது. அவர்களுக்கு உரிய இலக்கம் மட்டுமே அங்கே இருக்கும்.

அட்டவணை -3
பொதுத் தேர்தல் 2015 -யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்

| கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | கட்டம் 4 | கட்டம் 5 | கட்டம் 6 |
|---|---|---|---|---|---|
| Name of Parties/ Ind. Groups | Number of Votes | Percentage of Votes | Number of Votes | MPs Calculation | Actual Number of MPs |
| 1. ITAK | 207,577 | 69.12% | 207,577 | 4.2923 | 1 + 4 |
| 2. EPDP | 30,232 | 10.07% | 30,232 | 0.6251 | 1 |
| 3. UNP | 20,025 | 6.67% | 20,025 | 0.4141 | 1 |
| 4. UPFA | 17,309 | 5.76% | 17,309 | 0.3579 | 0 |
| 5. AITC | 15,022 | 5.00% | 15,022 | 0.3106 | 0 |
| 6. IND 04 | 1,979 | 0.66% | 0 | | |
| 7. IND 02 | 1,706 | 0.57% | 0 | | |
| 8. All Others | 6,459 | 2.15% | 0 | | |
| | | | | | |
| Total Valid Votes: | 300,309 | 100.00% | 290,165 | | |
| 5% of Valid Votes: | 15,015 | | | | |
| Rejected Votes: | 25,496 | 7.48% | | | |
| Total Polled: | 340,820 | 64.40% | | | |
| Total Electors: | 529,239 | | | | |
| One MP Required | | | 48,361 | | 7 |

இம்முறை 2020 ஓகஸ்ற் 5இல் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 19 கட்சிகளும் 14 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன. ஒவ்வொரு கட்சியும் சுயேச்சைக் குழுவும் பத்துப் பேரை தமது வேட்பாளர் பட்டியலில் சமர்ப்பித்துள்ளன.

வாக்காளர்களுக்கு வழங்கப்படும் வாக்குச் சீட்டில் 19 கட்சிகளும் 14 சுயேச்சைக் குழுக்களினதும் பெயரும் அவற்றிற்குரிய சின்னமும் பதிக்கப்பட்டிருக்கும். அதன்கீழ்

வேட்பாளர்களின் பெயருடன் அவருக்குரிய இலக்கம் வாக்குச்சாவடியில் வெளியில் வைக்கப்பட்டிருக்கும் அல்லது அவற்றை முன் கூட்டியே கட்சிகளின் அலுவலகம் அல்லது இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

உலகிலேயே இதுவும் ஒரு சிறந்த தேர்தல் முறையாகக் கொள்ளலாம். இந்த முறையில் ஒவ்வொரு வாக்கிற்கும் பலம் உண்டு. எனவே இத்தேர்தலில் வாக்கு இடுதல் மிக முக்கியமாகும்.

# அப்துல்கலாம்



சொல்லில் உண்மை,
செயலில் எளிமை,
வாழ்க்கையில் தனிமை,
வறுமையிலும் செம்மை!

பேச்சில் புதுமை,
பணியில் நேர்மை,
உள்ளத்தில் வெண்மை,
இலட்சியத்திலோ வலிமை!


மாணவர்களிடத்தில் மென்மை,
மழலைகளிடத்தில் இனிமை,
ஆட்சியில் கடுமை
அன்புக்கு மட்டுமே அடிமை!

தோல்விகளுக்கு அஞ்சாமை,
துன்பங்களுக்குப் பணியாமை,
எண்ணத்தில் மேன்மை,
ஒழுக்கத்தில் தூய்மை,
மனிதர்களுக்கோர் நல்உவமை!

மண்ணிலே பிறந்து
மனிதராய் வாழ்வோரே!
இத்தனை குணங்களையும்
இயல்பாய் கொண்டு

ஆ....வோம் நாமும்
அப்துல்கலாமாவோம்!

காரைக்குடி பாத்திமா ஹமீத்




416.321.6969

HomeLife / GTA Realty Inc. Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated

# யாரையும் உடனடியாக எடை போடவேண்டாம்!

## நேர்காணல்:வனிதா விஜயகுமார் சந்திப்பு:கண்ணன்

“பேரைக் கேட்டாலே சும்மா அதிருதில்ல” என்பதற்கு மிக பொருத்தமானவர் வனிதா விஜயகுமார். குடும்பத்தினருடனான பிரச்சினைகளில் சிக்கி விமர்சனத்திற்கு ஆளானவர். பிக்பாஸ் நிகழ்ச்சி பிரபலம். இவர் சமீபத்தில் தொடங்கிய யூட்யூப் குழுவில் ஒரே வாரத்தில் லட்சக்கணக்கான சந்தாதாரர்கள் சேர்ந்திருக்கின்றனர். இவரது ஒரு சமையல் காணொளி 2 கோடியே 80 லட்சம் பார்வையாளர்களைக் கடந்துள்ளது. சின்னதிரை ஷோக்கள், யூட்யூப் சேனல் என்று மும்மரமாக இருந்தவர், தற்போது வாழ்க்கையிலும் மும்முரமாகி விட்டார். மூன்றாவது திருமணம் செய்துகொண்டிருக்கிறார். அதிலும் சர்ச்சைகள்; இந்நிலையில், வனிதா விஜயகுமாரிடம் பேசினோம்.



**வனிதா விஜயகுமார் என்றாலே அதிரடிதான். தொடக்கத்திலிருந்த உங்களைப் பற்றி எதிர்மறையான பிம்பம்தான் அதை எப்படி நேர்மறையாக மாற்றினீர்கள்?**

ஒருவரை நாம் புரிந்துகொள்ளும்முன் நாம், அவர்களைக் குறித்து முன்முடிவுக்கு வருவது கூடாது. மக்கள் சுலபமாக முடிவு செய்துவிடுகின்றனர். ஆனால், நான் காலப்போக்கில் எல்லாம் மாறிவிடும் என்று நினைத்தேன். அது இப்போது நிகழ்ந்தும் விட்டது. ‘பிக்பாஸ்’, ‘குக் வித் கோமாளி’ நிகழ்ச்சிகளாகட்டும், என்னுடைய யூட்யூப் சேனலாகட்டும் நான் பேசாமல் இருந்திருந்தால் என்னைக் குறித்த புரிதல் இல்லாமலேயே போயிருந்திருக்கும். எதற்கும் அசராமல் ஒதுங்கிப்போகாமல், என்னைத் தவறாகப் பேசிவிட்டார்களே என்று பயப்படாமல், நான் தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பதை இப்போது புரிந்து கொண்டிருக்கலாம்.

யாரையும் உடனடியாக எடை போட வேண்டாம். எல்லோருக்குள்ளும் ஓர் அமைதித் தன்மை இருக்கும். அதற்கு காலம் மட்டுமே பதில் சொல்லும். ஏன் அவர்கள் இப்படி இருக்கின்றனர்? எவ்வளவு சவால்களை சந்தித்திருந்தால் இப்படி மாறியிருப்பர் என்பதை யோசித்தால் நல்லது. மக்கள் என்மீது இப்போது அன்பாக இருக்கிறார்கள். நிறையபேர் ‘மேடம் பிக்பாஸ் வீட்டிற்குப் போனபோது, நானே உங்களைத் திட்டினேன். ஆனால், உங்கள் உண்மையான குணத்தைப் புரிந்துகொண்டேன்’ என்று சொல்லி நெகிழ வைக்கின்றனர். இது கடவுள் எனக்குக் கொடுத்த பாக்கியம்தான்.

**மூன்றாவது திருமணம் குறித்து?**

திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று எனக்கு திட்டம் இல்லை. விஜய் டிவியில் ‘குக் வித் கோமாளி’ நிகழ்ச்சிக்குப் பிறகு நிறைய பேர் யூட்யூப் சேனல் ஆரம்பிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டே இருந்தனர். பிக்பாஸ் ஷோவிற்குப் பிறகு உங்களை நாங்கள் ரொம்ப மிஸ் பண்ணுகிறோம் என்றனர். அதனால்தான், ஊரடங்கிற்கு முன்பு யூட்யூப் சேனல் ஆரம்பித்தேன். கணவர் பீட்டர் பால் எனக்கு ஏற்கனவே தெரியும். நல்ல நண்பர். எனக்கு யூட்யூப்பில் பதிவேற்றுவதிலிருந்து சில தொழில்நுட்ப விஷயங்கள் தெரியாது. அப்போது, எனக்கு நம்பிக்கையளித்து அவர்தான். காணொளிகள் எடுப்பதிலிருந்து அனைத்து உதவிகளையும் செய்தார்.

அப்போது, அவர் வீட்டிற்கு வரும் போதெல்லாம் எனக்கும் மகள்களுக்கும் ஒரு துணை இருப்பதாக உணர்ந்தோம். கொரோனா சூழலில் நம்மால் எங்கும் செல்ல முடியாது. நம் வீட்டிற்கும் யாரும் வரமாட்டார்கள். இவர்தான் அனைத்து உதவிகளையும் செய்தார். என்னையும் அறியாமல் பிடித்துப்போனார். ஒருநாள் அவரின் பணிச்சூழலால் வீட்டிற்கு வரமுடியவில்லை. எதையோ இழந்தது போல் இருந்தது. நானே தொலைபேசியில் அழைத்து அவரிடம் பேசினேன். ‘நீ கூப்பிடுவாய் என்பது தெரியும். காத்திருந்தேன்’ என்றார். அப்போதுதான் இருவருக்குமே காதல் என்று புரிந்தது.

இதனை எப்படிக் கையாளப்போகிறோம் என்பதில் எனக்கு நிறையக் குழப்பமாகவும் தயக்கமாகவும் இருந்தது. ஆனால் குழந்தைகள், ‘எத்தனை நாளைக்கு நீ பழசையே நினைத்துக்கொண்டு இருப்ப? நாளைக்கு நாங்கள் திருமணம் செய்து கொண்டு போனால்கூட உன்னை நினைத்துத்தான் கவலைப்படுவோம். அவர் நம் வீட்டுக்கு வந்தபிறகு நீ புன்னகையாக இருந்ததை நாங்கள் பார்த்தோம். அதுதான் உனக்கு வேண்டும். நீ மட்டும் உன் மகனை நினைத்து ஏங்கிட்டே இருக்க. பலமுறை அழைத்தும் அவன் வரலியே? அவன் வாழ்க்கையை வாழ்ந்துட்டுத்தானே இருக்கிறான். நீ உனக்காக வாழு’ என்று ஆதரவு தெரிவித்தனர்.

நான் மனதளவில் துவளும்போதெல்லாம், நமக்கு ஏதாவது ஆகிவிட்டால் மகள்கள் எங்கு செல்வர்? இரண்டு வீட்டிற்கும் செல்ல முடியாதே என்கிற வலிதான் மிகக் கொடுமையாக இருக்கும். தனியொருத்தியாக இரண்டு பெண் குழந்தைகளை வைத்துக்கொண்டு எவ்வளவோ சிக்கல்கள், பொருளாதார நெருக்கடிகளை சந்தித்தேன். ஆனால், அதைத்தாண்டிய உற்சாகத்தையும் தைரியத்தையும் கொடுத்தது என் மகள்கள்தான். என் நம்பிக்கையை எந்த நிலையிலும் நான் கைவிட்டதில்லை. பெண்கள் எப்போதும் நம்பிக்கையோடு இருக்கவேண்டும்.

என் பெரிய மகள் வளர்ந்துவிட்டாள். அதனால், பிரச்சினை இல்லை. ஆனால், சின்ன மகளுக்கு ஒரு தாத்தாவோ, அப்பாவோ, அண்ணனோ, தம்பியோ இல்லாமல் ஏங்குவாள். எல்லாமுமாக எங்களுக்கு பீட்டர் பால் இருந்ததால்தான் திருமணம் செய்ய முடிவெடுத்தேன். ஜூன் 27 எனது அப்பா-அம்மா திருமண நாள். அன்றே திருமணத்தை நடத்தினோம்.

**பீட்டர் பால் தனது முதல் மனைவியை விவாகரத்து செய்யாமலேயே உங்களை திருமணம் செய்துகொண்டது சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கிறதே?**

எனது கணவர் பீட்டர் பால் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவரும் திரைத் துறையில் இருப்பவர் என்பதால் அவரைப் பற்றி எல்லாம் எனக்கு முன்பே தெரியும். அவருக்கு ஏற்கெனவே திருமணமாகி குழந்தைகள் உள்ளனர். அவருக்கும் மனைவிக்கும் இடையே சண்டை ஏற்பட்டு அவர் கடந்த 7 ஆண்டுகளாக தனியாகத்தான் வாழ்ந்து வருகிறார். இந்த சூழலில்தான் நாங்கள் திருமணம் செய்து கொண்டுள்ளோம். நான் யார் குடும்பத்தையும் கெடுக்கவில்லை. யாரையும் ஏமாற்றவில்லை. யாருக்கும் துரோகம் செய்யவில்லை. வனிதா தப்பு செய்யவில்லை என்பதை காலம் இந்த உலகத்துக்கு உணர்த்தும்.

**பீட்டர் பாலிடம் உங்களுக்கும் மகள்களுக்கும் பிடித்த விஷயம்?**

அவர் மென்மையானவர். பொறுமையானவர். பொறுப்பானவர். சிரித்த முகம். மிகவும் அக்கறையானவர். எங்களுக்காக பார்த்துப் பார்த்து செய்கிறார். ஒரு பெண்ணுக்கு கணவர் ஆதரவு கொடுப்பவராக இருக்கவேண்டும். அது எனக்கு முன்னாள் வாழ்க்கையில் நடக்கவில்லை. அதை இவரிடம் உணர்கிறேன். நான் வெளியில் என்ன நினைப்பார்கள் என்று கவலைப்படவில்லை. என் குழந்தைகளுக்கு என் வாழ்க்கையில் என்ன நடந்தது என்பது தெரியும். அவர்கள்தான் இந்த திருமணத்திற்கு முழு ஆதரவைத் தருகின்றனர். ஒரு குழந்தைக்கு தந்தை என்பது வேண்டும். என் வாழ்க்கையில் சில தவறான முடிவுகளை எடுத்திருக்கிறேன். தவறான நபர்களை தேர்வு செய்திருக்கிறேன். எங்கள் அப்பா, அண்ணன் இல்லாத குறையை அவர் முழுமை செய்தார்.

**உங்கள் குடும்பத்தினர் வாழ்த்தினார்களா?**

என் அப்பா உறவினர்களும் அம்மா உறவினர்களும் வாழ்த்து தெரிவித்தனர். எல்லோரும் ஆதரவைக் கொடுத்தனர். ஆனால், என் அப்பா, பெரியம்மா, அண்ணன், தங்கைகள்தான் வாழ்த்து

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)



# மௌனம் பேசும்




பேச வேண்டிய நேரத்திலே மௌனமாக இருப்பதும் தவறு. மௌனமாக இருக்க வேண்டிய நேரத்திலே பேசுவதும் தவறு என்பர். மௌனமாக இருக்க வேண்டிய நேரம் என்றால்; எந்த நேரத்திலும் நியாயத்தைப் பேசுவதில் என்ன தவறு இருக்கப் போகிறது என்றுதான் பலருக்கும் தோன்றும்.

இடம் பொருள் ஏவல் கருதி, மௌனமே பல இடங்களில் சிறந்த மொழியாவது மட்டுமல்லாமல், சிறந்த செயலாகவும் இருக்கும். எல்லாவற்றிற்கும் உடனடியாக எதிர்வினையாற்றாமல் 'React' சில விடயங்களை நாம் தூர நின்று பார்ப்பதே மகிழ்ச்சி தரும் என்கிறது வாழ்வியல்.

அது ஒரு கோடை காலம். மழையற்ற வெயிலின் கடுமையில் எப்போதும் இல்லாத அளவு வறட்சி ஏற்பட, அந்தக் கிராமத்தில் இருந்த குளத்தில் நீர் வற்றி விடுகிறது. மற்றப் பறவைகள் எல்லாம் வேறு நீர்நிலைகள் நோக்கிப் பறக்க, அந்தக் குளத்தில் இருந்த ஆமை மேல் அதீத நட்புக் கொண்ட இரண்டு வெள்ளைப் புறாக்கள் மட்டும் நட்பை பிரிய முடியாமல் நீரற்ற அந்தக் குளத்தையே சுற்றிச் சுற்றி வருகின்றன.

ஆனால் வறண்டுபோன இந்தப் பகுதியில் வெறுமனே இருப்பதால் ஒருவருக்கும் பயனில்லையே; தாங்களும் உயிர் வாழ வேண்டும் ஆமையும் காப்பாற்றப்பட வேண்டும், என்ன செய்யலாம்? என்று சிந்திக்கும்போது அங்கு தூரத்தில் ஒரு நீண்ட கயிறு தென்படுகிறது. உடனே புறாக் களுக்கு ஒரு யோசனை பளிச்சிடுகிறது.



அடுத்த நாள் அதிகாலையில் அந்தக் கயிற்றின் இரு பகுதியையும் இரண்டு பறவைகளும் தங்கள் கால்களில் கட்டிக் கொள்ள, ஆமையை கயிற்றின் நடுப் பகுதியை அதன் வாயால் கவ்விக் கொள்ளச் செய்து வேறு நீர்நிலைக்குத் தூக்கிச் செல்வதென்று முடிவாகிறது.

திட்டம் செயல்படும்போது பக்குவப்பட்ட அந்தப் பறவைகள் தங்கள் நட்பு ஆமையிடம் உலக நடப்பை எடுத்துச் சொல்கின்றன. நாம் பல இடங்களைக் கடந்து போக வேண்டி இருக்கிறது. பலர் பல மாதிரி இருப்பர். ஏதேதோ வேண்டாத பேச்சுகள் உன் காதில் விழலாம். உன் பொறுமையை அவை விலை பேசலாம். நன்கு புரிந்துகொள். அதற்குப் பதில் சொல்வதற்கான நேரம் இது அல்ல. ஏனென்றால் நாங்கள் என்னதான் கயிறைப் பிடித்துத் தூக்கிச் சென்றாலும் உன்னுடைய வாயைத் திறந்தால் அவ்வளவுதான். நீ கீழே விழுந்து விடுவாய். இது பாட்டி கதையில் வரும் காகத்தின் வடை அல்ல உன் 'உயிர்' என்று எச்சரிக்கின்றன.

ஆமையும் புரிந்து தலை அசைக்க, பயணம் தொடங்குகிறது. வறண்ட காடு கள், பாலைவனம் எல்லாம் தாண்டி இதோ மக்கள் நடமாட்டம் மிக்க பசுமையான ஓர் ஊர் தென்படுகிறது. இன்னும் சற்றுத் தூரம் சென்றால் அவர்கள் செல்ல வேண்டிய ஏரி வந்து விடும். அங்கு ஆமையை இறக்கி விட்டுவிட்டு தங்கள் நட்புத் தொடர அதனோடு அங்கு நிம்மதி யாக இருக்கலாமெனப் பறவைகளுக்குள் மகிழ்ச்சி எழுகிறது.

அப்போது அந்த ஊரில் நடமாடும் மனிதர் பலரும் இரு பறவைகள் ஆமையை தூக்கிச் செல்லும் அதிசயக் காட்சியை அண்ணாந்து பார்த்து, அவரவர்களுக் குரிய வகையில், அவர்கள் அறிந்த முறை யில், வியப்பை வெளிப்படுத்துகின்றனர். சிலர் கை தட்டித் தங்கள் அன்பை, மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். சிலர் கல்லை விட்டு எறிந்து தங்கள் இருப்பை பறைசாட்டுகின்றனர். சிலர் கடுமையான விமர்சனங்களால் தங்கள் அறிவை கொளுத்திப் போடுகின்றனர்.

அந்த ஆமை ஊனமுற்றதாக இருக்குமோ, அது ஏதோ பெரும் குற்றம் செய்திருக்குமோ, இதை எங்கே இந்த பறவைகள் நாடு கடத்துகின்றன; இப்படிப் பலவாறு போகிறது எல்லையற்ற விமர்சனங்கள்;

முதலில் அவர்கள் பாராட்டி கை தட்டும் சத்தத்தால் பெருமிதம் கொண்ட ஆமை யால் இப்போது அவர்கள் கூச்சலையும், பலவாறான விமர்சனத்தையும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நிறைகள் பேசப் படும்போது, அதன் எண்ணிக்கை கூடும் போது, இத்தனை பேரால் தான் பாராட்டப் படுகிறோமே எனப் பெருமிதம் கொள்ளும் மனம்.. அந்த அத்தனை பேரும் தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் கை தட்டமட்டுமல்ல, சில சூழலில் கைகொட்டியும் சிரிப்பர்; தங்கள் சிறு நிறைகளையும் பெரிது படுத்தும்

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்...)

# EDUCATION

## Review Questions 20-14

### ➤ PHYSICS 11

Assume that a 1800 kg car A is travelling 90 km/h behind an another car B with a distance of 70 m when the car B crashes and stops suddenly. If the average breaking force exerted by the car A is 6400 N determine whether the car A will collide with the car B. (Assume that the drivers reaction time is 0.5s).

### ➤ ADVANCED FUNCTIONS 12

(i) Determine an equation of a $4^{th}$ degree polynomial function with zeros 1,2 of order 1 and 3 of order 2 passing through (4, 20).

(ii) Determine the solution set for the inequality $x^4 + 9 \leq 6x^2$

(iii) Determine the x- values in the interval $[0, 2\pi]$ that satisfy the inequality

$$0 < \sin x \leq \frac{\sqrt{2}}{2}$$

### ➤ CHEMISTRY 11

An aqueous solution contains $XO_3^{2-}$ ions form a precipitate with aqueous $Ca^{2+}$ ions when 25mL of a solution aqueous ions with a concentration 0.78mol/L is added. The mass of the precipitate formed is 1.96g. Determine the atomic mass of X and indentify the element

### ➤ CALCULUS 12

Find $\lim_{x \to \infty} \frac{\sqrt{x^4+1} - 2x^2 - 1}{x^2}$


(ii) Find the limits $\lim_{x \to 0} \frac{\sin 2x + 3x}{2x + \sin 3x}$

### ➤ CHEMISTRY 12

(i) Explain how the emission spectrum of hydrogen is related to the energy levels in hydrogen.

(ii) Compare $3^{rd}$ ionization energies of calcium and chlorine

(iii) Name the following compounds




(iv) Determine the energy of one mole of photon (wave length 260nm).

How many quanta of radiation is required for an energy of 5J? frequency of the radiation is $2.42 \times 10^{15} s^{-1}$

### ➤ BIOLOGY 12

(i) What type of RNA has the shortest lifetime in cells.

(ii) Describe the differences between mRNA, tRNA and rRNA.

Answer key
20-14 next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

# எம்மை மனிதனாக்குவது எது?

**Words of Peace**
**Prem Rawat.**
**www.timelesstoday.com**

**What makes us Human**

“நீங்கள் பயத்துடன் இருக்கும்போது எதுவுமே நடைபெறாது. எம்மிலிருந்து அந்தப் பயத்தை எடுத்துவிட்டால் அப்போது அற்புதமானதொரு விடயம் நடைபெறும். உயிர்வாழ்வைக் கொண்டாடுங்கள்” - பிரேம் ராவத்

நான் சொல்ல வேண்டியதெல்லாம் உயிருடன் இருப்பதற்கு நீங்கள் எவ்வளவோ பாக்கிய சாலிகள் என்பதே அற்புதமான அளவு பாக்கியசாலிகள். ஈடுஇணையற்ற அளவு பாக்கியசாலிகள். உங்கள் உள்ளேதான் அற்புதமான அளவு அமைதியின் சமுத்திரம், அந்த ஆனந்தம் உள்ளது. அதாவது உங்கள் உள்ளே அழகான, குளிர்மையான நிழல் உள்ளது. அந்தக் குளிர்ந்த நீர் நிலை உள்ளது. அது எப்பொழுது குழப்பமடையத் தொடங்குகிறதோ அப்போது நீங்கள் தெரிந்திருக்க வேண்டியதெல்லாம் நீங்கள் எங்கு சென்றாலும் உங்களுடன் இந்த அற்புதமான அமைதியையும், ஆனந்தத்தையும் எடுத்துச் செல்கிறீர்கள். இவை எப்பொழுதும் அங்கேயே உள்ளது.

அத்துடன் உங்களை மிகப் பாக்கியசாலியாக்குவதும் அதுதான். வெளியே உள்ள சாதனைகளல்ல. ஏனெனில் அவை வந்து போவன, நிரந்தரமற்றவை. ஒரு கட்டத்தில் அவை பிரயோசனமற்றவை ஆகிவிடும்.

நான் இரு சுவர்களைப் பற்றிப் பேசுகிறேன். ஒரு சுவர் அதனூடாகத்தான் நீங்கள் வந்தீர்கள். அத்துடன் நீங்கள் பிறந்தீர்கள். அடுத்த சுவரை நோக்கி நீங்கள் நகர்ந்து கொண்டு இருக்கிறீர்கள். நீங்கள் அந்தச் சுவரினூடாகச் செல்வீர்கள். அத்துடன் நீங்கள் மறைந்து விடுவீர்கள். இதைக் கேட்க யாரும் விரும்புவதில்லை என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஏனெனில் இது எமக்குத் தரப்பட்டிருக்கும் உயிர் வாழ்வுடன் உள்ள விசித்திரமான உறவைக் கொண்டுள்ளது. ஒரு வகையில் இது இல்லாமல் எம்மால் எதுவும் செய்ய முடியாது.

நான் கருதுவது என்னவென்றால் இது அப்படிப்பட்டதொரு விடயம். இது எப்படியெனில் உங்களுக்கு அது தேவை, 'உயிர்' என அது அழைக்கப்படும். இந்தவிடயம் உங்களுக்கு நிச்சயம் தேவை. அத்துடன் மறைமுகமாக நீங்கள் அதை உண்மையாகவே நேசிக்கிறீர்கள். இது அப்படிப்பட்டதொரு காதல் விவகாரம். அது வெளிப்படையான தொன்றல்ல.

அதேநேரம் நீங்கள் இந்த உயிர் வாழ்வை நேசிக்கிறீர்கள். அதாவது விடயங்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் இருக்க வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள். அதுதான் உங்கள் யுத்தம். விடயங்கள் உங்கள் கற்பனைக்கு அமையவும், உங்கள் கனவுகளுக்கு அமையவும், உங்கள் எண்ணக் கருத்துக்களுக்கு அமைவாகவும் இருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள். இந்த விடயங்கள் எல்லாம் இப்படித்தான் இருக்க வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள். நீங்கள் இவ்விடயங்கள் எல்லாம் இப்படித்தான் இருக்க வேண்டுமென விரும்புகிறீர்கள். நீங்கள் இந்த மனிதன் இப்படித்தான் இருக்கவேண்டும் என விரும்புகிறீர்கள். நீங்கள் அந்த மனிதன் அப்படி இருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள்.

உங்கள் முழு வாழ்நாளிலும் அந்த விடயத்தை நீங்கள் நேசிக்கிறீர்கள். ஆனால் நீங்கள் அதைப் புறக்கணிக்கிறீர்கள். ஆகவே நீங்கள் உயிர் வாழ்வை நேசிக்கிறீர்கள். ஆனால் நீங்கள் அதைப் புறக்கணித்தீர்கள். ஏன்? ஏனெனில் நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள். உங்களிடம் முயற்சி செய்வதற்கான சாத்தியம் உள்ளது. அல்லது உங்களால் முடியும் என்று எண்ணுகிறீர்கள். எல்லோரையும், எல்லாவற்றையும் மாற்ற முயற்சிக்கிறீர்கள்.

உங்களால் எல்லோரையும் மாற்ற முடியுமானால், எல்லாவற்றையும் மாற்ற முடியுமானால் - அது சிரிப்பிற்கிடமான தொரு எண்ணமாகும். ஆனால் இதுதான் உங்கள் பாதையின் வரைபடம். உங்கள் பாதையின் வரைபடம் என்னவென்றால் "நான் என்னை மாற்றப்போவதில்லை (நான் மாற விரும்பவில்லை). ஆனால் நான் எல்லோரையும் மாற்ற விரும்புகிறேன். அத்துடன் நான் எல்லாவற்றையும் மாற்ற விரும்புகிறேன். அதுதான் உங்கள் பாதையின் வரைபடம்"

ஆச்சரியமான விடயம் என்னவென்றால் பாதைக்கான அந்த வரைபடம் எவ்வளவு பொதுவான தொன்று என்பது பற்றி உங்களுக்கு எந்தக் கருத்தும் இல்லை. ஒவ்வொருவரிடமும் இதேமாதிரியான பாதைக்கான வரைபடமே உள்ளது. ஒவ்வொருவரும் ஊகிப்பது என்னவென்றால் "மக்கள் தாம் விரும்புவதுபோல் இல்லாதிருந்தால் அவர்கள் எப்பொழுதும் நீங்கள் கூறுவதைக் கேட்டால் (ஏனெனில் நீங்கள் எப்பொழுதும் சரியானவர்) நீங்கள் இந்த விடயங்கள் எல்லாம் இப்படித்தான் இருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள். நீங்கள் மிகப் பிழையாக இருந்தாலும் நீங்கள் சரி.

அதுதான் உங்கள் முயற்சி. "உலகை மாற்றுவோம்" உண்மையிலேயே இதில் உள்ள நகைச்சுவையை நீங்கள் உணர்வீர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொருவரையும் மாற்றத் தெண்டிக்கின்றனர். ஆனால் ஒருவருமே மாற விரும்பவில்லை. ஆகவே உங்களுக்கு அருகே உள்ள நபரை மாற்ற நீங்கள் முயற்சிக்கிறீர்கள். ஆனால் அந்த மனிதனோ உங்களை மாற்ற முயற்சிக்கிறான். அத்துடன் அந்த மனிதனும், உங்களுக்கு மறு பக்கத்தில் இருக்கும் மனிதனும் உங்களை மாற்ற முயற்சிக்கிறான்.

மாற்றம், மாற்றம், மாற்றம். ஆனால் எவருமே மாற விரும்பவில்லை. ஏனெனில் மாற்றம் என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ளவில்லை." இந்தச் சராசரம் மாற்றத்தைப் பற்றியது, உயிர்வாழ்வு புரிந்து கொள்தலைப் பற்றியது" (அரிஸ்ரோட்டல்)

பாருங்கள். இன்று மாலை நான் உங்களுக்குத் தரவந்திருக்கும் பரிசு. உங்களுக்காக என்னிடம் பரிசு ஒன்று உள்ளது. அதை உங்களுக்கு வழங்கும் வழிமுறையில் நான் இருக்கிறேன். அது ஒரு பொருள் அல்ல. ஆனால் அது மிகவும் அழகான பரிசு. ஏனெனில் அது வித்தியாசமாக சிந்திக்க வைப்பதற்கான தொரு பரிசு. அந்தப் பரிசைத்தான் நான் மக்களுக்கு வழங்குகிறேன்.

ஏனெனில், அமைதி உங்களின் உள்ளே இல்லை, அதை யாரோ ஒருவர் கொண்டு வரப் போகிறார் என்றுதான் உங்கள் சிந்தனையில் உள்ளது. தவறு. அது உங்கள் உள்ளேதான் உள்ளது.

இந்த உலகம் மாறத் தேவையில்லை. மக்களுக்கும் மாறவேண்டிய தேவையில்லை. நீங்கள் மாறவேண்டும். நீங்கள் எப்படி மாறுவீர்கள்? மாறாமல் இருப்பதன் மூலமா? அப்படியா? ஆம். நீங்கள் உண்மையாக யாரோ அதுவாக நீங்கள் இல்லை. நீங்கள் உண்மையில் யாரோ அதுவாக இன்னும் நீங்கள் வரவில்லை. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உண்மையிலேயே நீங்கள் யாரோ அப்படி வருவதுதான். அத்துடன் அந்த மாற்றம் நிறைவடைந்து விடும் அதுதான் அந்த மாற்றம்.

அதைத்தான் சோக்கிரதீஸ்ஸும் கூறினார் "தன்னைத்தான் உணர்தல்". ஏனெனில் நீங்கள் யார் என்பதை நீங்கள் உண்மையாகவே உணர்ந்து கொண்டால் நீங்கள் மற்ற விடயங்களைத் துரத்திச் செல்ல மாட்டீர்கள். நீங்கள் அந்த அழகான செழுமை, தெளிவு என்னும் குளத்திற்குள் குதித்து அதில் சுழியோடி "ஆகா" என்பீர்கள். ஏனெனில் அது உங்கள் உள்ளேயே உள்ளது. அதை உங்களின் உள்ளேயே நீங்கள் கொண்டிருக்கிறீர்கள்.


(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

# மௌனம் பேசும்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

அவர்கள் தங்கள் சிறுசிறு குறைகளையும் பூதாகரமாகச் சுட்டிக்காட்டுவர்; என்பதை புரிந்து கொள்ள முடியாமல் போகிறது.

விவாதங்களும் விமர்சனங்களும் அந்த ஆமையை என்னவோ செய்கிறது. எங்கே இவர்கள் தன்னை பலவீனமானவனாக நினைத்து விடுவார்களோ என இயலாமையாக இருக்கிறது. தான் ஒரு காட்சிப் பொருளாகி விட்டோமோ என ஈகோ துடிக்கிறது. இந்தப் பறவைகள் எனக்கு உதவி செய்கிறது என்றால் இந்தப் பறவைகளுக்கு நானும் பல உதவிகள் செய்திருக்கிறேன் எனத் தன்மானம் நிமிர்கிறது. தன்னை சுற்றி எழும் விமர்சனங்களுக்குச் சரியான பதிலடி கொடுக்க வேண்டுமென அந்த ஆமைக்கு குறுகுறுவென இருக்கிறது.




ஆனால் அதற்கு தன் வாயைத் திறக்க வேண்டும். வாயைத் திறந்தால் அவ்வளவுதான் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருக்கும் தன் பிடி தளர்ந்து உயரத்திலிருந்து கீழே விழ வேண்டி இருக்கும் என எந்த முன்னெச்சரிக்கையும் மனம் மறக்கடித்து விடுகிறது.

உணர்ச்சி வசப்படுவோரால் உண்மையை உணர முடியாது. விழிப்புணர்ச்சியோடு செயல்பட இயலாது. எந்தச் சூழலிலும் தன் உணர்ச்சிகளை தன் கைவசம் வைத்துக் கொள்கிறவர்களால் மட்டுமே எதையும் திட்டமிட்டபடி செய்ய முடியும்.

ஆமையும் தன்னை மறந்து, அந்தச் சூழலின் வயப்பட்டு, தன்னை நிலை நிறுத்த விளக்கம் கொடுப்பதற்காக வாயை திறக்கிறது. அவ்வளவு தான். வாயால் கயிற்றைப் பிடித்திருந்த பிடி தகர்ந்து, நிலை குலைந்து கிழே விழும் நேரம்; நல்ல வேளையாக குளம் வந்து விட குளத்திலே விழுவதால் சிறு அதிர்ச்சியுடன் உயிர் தப்புகிறது. ஆனால் அப்போதுதான், தான் எத்தனை பெரிய தவறு செய்தோம் என்பது அதற்கு புலப்படுகிறது. ஒரு அடி தள்ளி விழுந்திருந்தால் கூட விபரீதமாகப் போய் இருக்குமே என உடல் நடுங்கிப் பெருமூச்சு எழுகிறது.

இந்த கதை உங்களுக்கு எதை நினைவு படுத்துகிறது என்று கொஞ்சம் யோசித்து பாருங்கள். உங்களுக்கு வேண்டியோர் நல்ல மனதோடு உதவி செய்யும்போது, யாரோ ஒருவர் அதை விமர்சனம் பண்ணினால் கூட, அவர்கள் எனக்கு சும்மா ஒன்றும் உதவி செய்து விடவில்லை. நான் இப்படி செய்திருக்கிறேன், அப்படி செய்திருக்கிறேன் என்று உதவுபவர்களையே நிதானம் இழந்து குற்றம் சுமத்தும் சந்தர்ப்பம் பெரும்பாலும் பலருக்கும் எழுகிறது.

அதனால் எந்த உதவியும் யாரும் செய்ய வேண்டாம் என வலிந்து சிரமங்களை கைக்கொள்ளத் துடிக்கிறது வைராக்கியம் கொண்ட மனம். அல்லது அப்படி யாரும் சொல்லாவிட்டால் கூட எங்கே எதுவும் சொல்லி விடுவரோ என வேண்டாத கற்பனைகள் செய்துகொண்டு சுற்றத்தையும் நட்பையும் தள்ளி வைத்து மனம் தனக்குள் இறுகிக் கொள்கிறது. வேண்டாத இடங்களில் வார்த்தைகள் வீரியம் கொண்டு வெடித்து எழ அதனால் பிரச்சினைகள் மேலும் பெரிதாகிறது.

எந்தச் சூழலிலும், தான் நினைப்பதை எல்லாம் சொல்வதற்கு இது சரியான நேரம் தானா அதன் பின்விளைவுகள் எப்படி இருக்கும் என சிந்தித்து மௌனம் கொள்ள வேண்டிய இடத்தில் வார்த்தைகளை வசப்படுத்துவதே நிலையான மகிழ்ச்சி தரும்.

அவர்கள் அப்படி நடந்து கொண்டதால் தான், நான் இப்படி நடக்க வேண்டியதாகி விட்டது என தனக்குத் தானே நியாயம் கற்பித்துக் கொள்வதில் என்ன பலன் இருக்கப் போகிறது.

உங்களுக்கான அந்தநேர நியாயத்தை மட்டும் பார்க்கும்போது, அது நிம்மதியை இழக்கச் செய்யலாம். நிம்மதியில் கவனம் வைத்து சிந்தித்து செயல் படவேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு நிதானம் இழக்காமல் செயல்பட்டால் உங்களுக்கான நியாயம் நிச்சயம் நல்ல முறையில் நிலைபெறும். எது வேண்டும் நமக்கு!

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**
2 bedroom Bsmt for rent. Laundry. Close to high school, Walmart, NoFrills, & Costco. Avail. August 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.523.1312**

**MCCOWAN RD. & STEELES AVE.**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Available immediately.
**(416)627-5184 / (647)838-5822**

**MARKHAM & 14Th AVENUE**
1 bedroom+tend bsmt for rent. Sep. Entrance, Parking. Close to 24 hours bus & other all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-761-8270**

**MARKHAM &14Th AVE.**
2 Bedroom new bsmt for rent. Sep.entrance, parking. Female student or family preferred. Close to Bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.829.3212**

**SHEPPARD BETWEEN MCCOWAN**
1 Bedroom walkout bsmt for rent. 2 floors, 2 full washroom. Close to all facilities. Avail. August 01, 2020.
Contact: **416.904.2844**

**NEILSON & FINCH**
1 bedroom bsmt for rent. Sep entrance. Parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2020.
**Call or text: 647-628-6991**

**BRIMLEY & ELLESMERE**
1 bedroom Bsmt for Rent with 1 full washroom & kitchen.Sep. Entrance, 1 parking, internet. Available immediately.
தொடர்புகளுக்கு: **416-738-9165**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities. Couple preferred. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416-613-1792**

**MIDLAND & EGLINTON.**
2 bedrooms bsmt for rent. Sep. entrance. 1 parking, laundry. Walk to school, TTC & subway station. Available immediately.
**416-757-4735 / 416-528-9683**

**MORNINGSIDE & OASIS BLVD**
1 bedroom bsmt for rent. Laundry and car parking. Only for Pentecost christians. Close to school, TTC. Avail. August , 2020
**Contact: 416.831.8549**

**MORNINGSIDE & MCLEVIN AVE.**
Newly renovated 2 bedroom bsmt for rent. It is located in Students from centennial and U of T are encouraged to contact through : **647-657-6996**

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.357.7854**

மேலும் பக்கங்கள் 15, 16

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom bsmt for rent. Side entrance & walkout entrance, parking. Close to TTC, School, shopping. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.438.3634**

**NEILSON & HWY 401**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, School, shopping. Avail. Immediately.
**416.283.8735 / 647.618.8735**

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.330.4327**

**MARKHAM RD & STEELES AVE. EAST**
2 bedroom bsmt for rent. Sep. entrance. No parking. Rent is $1,100 per month+utilities. Close to all facilities. Avail. from August.
தொடர்புகளுக்கு:**416.500.9276** Call or text

**MARKHAM & 14Th AVENUE**
2 bedroom bsmt for rent. Sep. Entrance, Parking. Close to 24 hours bus & other all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647-761-8270**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Working Female or student preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

**Morningside & Oldfinch**
2 bedroom walkout basement available August 1st. Looking for small family or working females.
Contact number **647-675-4799**

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Family Preferred. No smoke or no pets. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.998.8156**

**HWY 7 & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. 1 Parking. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.737.1146**

## BASEMENT FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 bedrooms bsmt for rent. Sep. entrance. Close to TTC subway & stores. No laundry. One car parking. Avail. immediately.
**Contact: 416-371-8101.**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
3 Bedroom & 2 washroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.885.2860**

## ROOM FOR RENT

**BIRTCHMOUNT & SHEPPARD.**
A big bed room for rent in the basement. Sep. entrance, parking. Close to bus stop & shopping malls. Avail.Immediately.
தொடர்புகளுக்கு: **416.873.0549**

**MARKHAM & STEELES**
1 bedroom for rent at a Basement Apartment. Includes utility also Tamil Stores and all transit routes. Avail. from end of July. Call **(416 )-558-8562.**

**BRIMLEY & LAWRENCE**
Room for rent. Sep. entrance, parking, laundry. Close to S.P. Importers, ect. Avail. immediately.
**647.402.9525 / 647.533.9930**

**BIRCHMOUNT & LAWRENCE**
1 bedroom + washroom for rent in a condo. Sharing with kitchen & washroom. Close to all facilities.
**Cell: 647-886-2226**

**MARKHAM & 14Th AVENUE**
1 bachelor Bedroom for rent. Parking, laundry, utilities. Close to school, shops, park, & YRT. Avail. Immediately.
**(647) 500-4564 / (905) 472-1370.**

**MIDDLEFIELD & FINCH**
ஐயப்பன் கோவிலுக்கு அருகாமையில் தனி வீட்டில் தனி அறை with தனி washroom உடன் உடனடியாக வாடகைக்கு உண்டு.
**Cell: 416.837.4845**

**DANFORTH & EGLINTON**
1 Room for rent with attached bathroom in main floor. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.838.6636**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom for rent. Parking, laundry. Male preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

## BASEMENT FOR RENT

**VICTORIA PARK & LAWRENCE**
Large 2-bedroom bsmt for rent. Sep. entrance.All utilities included. In front of a beautiful park,Close to TTC, schools, grocery stores (No Frills), and temple. Looking for a young, working couple, or working women.
Kumar- **416-288-9575/ 647-762-9575**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
**வாடகைக்கு உள்ளது**
**அழையுங்கள்.**
**647.861.8240**

## உடனடி வாடகைக்கு விற்பனைக்கு

**வீடுகள், கொண்டோக்கள் விற்க, வாங்க வாடகைக்கு விட வாடகைக்கு பெற்றுக்கொள்ள அழையுங்கள்**
**Jey - 416.816.9011**

## HOUSE FOR RENT

**NEILSON & FINCH**
3 bdrm 2-storey house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2020.
**Call or text: 647-628-6991**

**KENNEDY & EGLINTON**
Main Floor. 3 bedroom, 1 bathroom. Located steps to schools, shopping, and transit. Avail.Immediately.
**Contact: 416-473-3052**

**KEELE & SHEPPARD.**
3 bedrooms brand new town house for rent. Close to all facilities.
**Nitku: 647.388.5295**
**Maha : mnitku58@yahoo.com**

**MCCOWAN & EGLINTON**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

## CONDO FOR RENT

**MARKHAM & 16TH AVENUE**
2 bedroom. 1 bathroom. Located across Mount Joy GO Station. Close to schools, shopping and highway 407.
**Contact : 416-473-3052**

**MARKHAM & DENISON**
3 bedrooms, 2 full washrooms condo for rent. parking, 1 storage room. Close to all facilities. Avail. September 01, 2020.
Jothy **647.505.2582 / 905.471.2582**

**ELLESMERE & MARKHAM**
1 Bedroom Condo. for Rent. Close to all facilities. Available from August 01, 2020.
தொடர்புகளுக்கு: **647.404.2586**

## BASEMENT FOR RENT

**NEILSON & MCLEVIN**
2 bedroom bsmt for rent. Sep. entrance.one parking / laundry Close to school, mall, grocery store, bus stop. Small family or couple preferred Available immediately
**647.909.9529 / 647.770 .3118**

## BASEMENT FOR RENT

**NINTH LINE & 14th AVE.**
2 Room bsmt for rent. Sep. entrance, 1 bathroom, 1 parking, Laundry, No pets. Close to all facilities.
**647.621.4309 / 905.5545.673**

## ஹைக்கூ!

தானாக உதிரவில்லை
உதிர்த்தது காற்று
இலைகளை!

கவிஞர் இரா.இரவி

## BASEMENT FOR RENT

**NEILSON & MCLEVIN AVE.**

1 Bedroom basement for rent. Sep.entrance.Near all amenities. Available immediately.

Please call **Sri**

**647.534.5617.**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**

2 bedroom , 1 washroom walkout basement for rent. Along with parking and laundry. Close to school & shopping centers. No smoking & no pets. Avail. August 01, 2020.

தொடர்புகளுக்கு: **647.981.1997**

## BASEMENT FOR RENT

**LAWRENCE & GOLF CLUB.**

3 Bedroom bsmt apartment for rent. Close to all facilities. Available Immediately.

**Call 647-709-1711**

## ROOMS FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**

In a 3 bedrooms basement for rent. Each bedroom will be rented separately. Male preferred. Parking, laundry. Close to all Lawrence road & TTC bus stop.

தொடர்புகளுக்கு: **365. 338. 3406**

## ROOM FOR RENT

**KENNEDY & EGLINGTON**

1 Bedroom for rent in 2 bedroom apartment. Living with one person, shared kitchen & bathroom. No pets. Parking is avail. for extra cost. Walking distance to TTC, Kennedy Station, Kennedy GO, groceries. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **(647) 765-4924**

## CONDO FOR RENT

**MARKHAM & LAWRENCE**

2 Bedrooms 2 Story Condo House for Rent. Laundry, GYM, Swimming pool. No pets or no smoking. Very close to all facilities. Available July 15, 2020.

**416-573-7275**

**Text or call after 5PM**

## HOUSE FOR RENT

**MIDLAND & LAWRENCE**

3 +1 bedrooms Full house for rent. Avail. September. Close to TTC, School. தொடர்புகளுக்கு:

**416.670.3349 / 647.296.7932**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELLESMERE**

2 Room Bsmt for rent. Sep. entrance. hwy 401 -3km, 24 hours bus service, scarborough town center (10 mins), mornings side university (8 mins), centennial college (5 mins). Student or couples preferred. Avil. August 05, 2020.

தொடர்புகளுக்கு: **416.566.1918**

## BASEMENT FOR RENT

**BELLAMY & LAWRENCE**

3 bedroom Basement for rent. separate entrance, car parking, laundry, Internet. Close to all facilities. Avail. Immediately.

**647.920.3019 / 647.781.3019**

## HOUSE FOR RENT

**KENNEDY & LAWRENCE**

3 bedrooms, one full washroom, 1 power washroom & all the amenities. Close to school shopping ttc & etc. Laundry & parking. 3 bedrooms upstairs it's bungalow. Avail. Immediately.

**289.244.8555 /647.927.5541**

## HOUSE FOR RENT IN JAFFNA

JAFFNA Town

**Close to Nallur Temple**

**Intersection:** Clock Tower Lane & Brown Road. Brand new washroom

Contact: **416-904-2844**

**+94.77.604.9815**

## CONDO FOR RENT

**MIDLAND & EGLINTON**

Two bedrooms plus dent, One parking One locker room, Two full washrooms. 2 minutes walk from Kennedy station. Avail. July 15, 2020.

தொடர்புகளுக்கு:

**647.201.6075**

## APARTMENT FOR RENT

**KINGSTON RD & MIDLAND**

1 bedroom apartment for rent . Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு:

**416.880.3636.**

## HOUSE FOR RENT

**BRIMLEY & EGLINTON**

**Top Floor:** 3 Bedrooms, 1 Washroom, 1 Kitchen. Family preferred. Close to TTC bus, schools & grocery.

**Please call or message Victor at**

**(647) 406-2999**

## INSTALL / REPAIR

Garage door opener
Over the Range Microwave
Custom Glass Shower Door, Much More....
Looking for a Handyman

Call: **416-666 6403**

## வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட

அழையுங்கள்: **647.402.2937**

## SALE / RENT

**MARKHAM & SHEPPARD**

4 bedroom & 3 washroom house for **Sale.**

**NEILSON & SHEPPARD**

2 bedroom & 2wasroom Houses for **Rent.**

Kannan Kankesu: **416.834.4200**

## AZ DRIVERS WANTED

**Echo Expedite is now hiring AZ drivers. 0.65/Mile Minimum 3 years experience with clean record. Please Call:**

**416 565 9820/ 905 554 1664**

**Info@echoexpedite.com**

## HOUSE FOR SALE

**SCARBOROUGH**

**KENNEDY & HWY 401**

3 Bedroom condo apartment with one parking & very low maintenance fee for sale $299,900.00

**AJAX**

**HARWOOD & DREYER**

2 storey, 3 Bedroom, 2 bathroom Condo town house with part finished basement & attached car garage for sale $389, 900.00

**416.917.0557**

**Rajah Masillamany**

**(HomeLife / Future Realty Inc.)**

மேலும் பக்கங்கள் 14, 16

## BASEMENT FOR RENT

**PHARMACY & LAWERANCE**

Recently Renovated 2 Bedroom Bsmt for rent. Sep. entrance, Parking, laundry close to all facilities. seniors preferred. Avil. August 01, 2020.

**contact: (416) 285 0428**

## BASEMENT FOR RENT

**MORNINGVIEW TRAIL & OLD FINCH**

2 Bedroom & 2 Washroom bsmt for rent. Separate Entrance & Separate Laundry. Near School ,Park 2 minute work TTC & daycare. Priority family or Couples. Avail. immediately.

**Contact: Suthan 416.473.4200**

## SHORT TERM HOUSE RENT

**Location : 5659 Gilmore Road, Newtonville, Clarington, ON**

10 acre land with fully furnished 5 bedroom bungalow house for short term rent. Hot tub, swimming pool, two soccer field, sports items, campfire patio with BBQ & Fully equipped kitchen items

**Contact: P. Pirathapan 416.875.4119**

## COOK அல்லது KITCHEN HELPER தேவை

**Oshawa**வில் அமைந்துள்ள **(bonn & simcoe) Restaurant**க்கு **Cook** அல்லது **Kitchen Helper** உடனடியாகத் தேவை.

மேலதிக விபரங்களுக்கு: Rajah **647.271.7975**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

* Scarborough - Ellesmere / Military trail – Bsmt
Room For Students Near U Of T Scarborough. Furnished Room Available. Everything Included. 5 Minutes Walk To U Of T / Centennial College. [Asking $520/m]

* Scarborough – Ellesmere Rd / Military trail – Bsmt
2 Rooms Available for Students Or Professional. Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401. [Asking each- $560/m]

*Scarborough Morningside / Sheppard – Detached – Rooms
One Room available for Female Students or Couples. Close To Scarborough U Of T, Centennial College, Pan Am Ctr, Hwy 401, Hospital. [ Call 647-913-9241]

Bowmanville – Hwy 401 / Hwy 2 – Detached – House
Furnished large home with 4 or 6 Bedroom Available For Short & Long Term Rent.[ Call 647-913-9241]

*House for Sale in Jaffna – Near Kacheri, St.johns College, Chundikuli.High demand rental area. Well maintained house in a Land about a quarter Acre. CDN-$200,000.Clear Title. Call Karu 416-616-7278

*Scarborough - Mccowan / Ellesmere – Bungalow – Bsmt
(2 Brm + 1 Bath) Separate Entrance. 2 Parking spaces. Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401..[ Asking $1500/m]

* Scarborough – Markham / Birchmount – Condo Apt
Once bedroom Condo Unit available. Great Location. [Asking $2000/m]

* Scarborough– Kingston / Lawrence – Bungalow –Main Fl
(3 Brm + 1 Bath) Spacious Main Floor. Mins To Hwy 401. [Asking $2200/m]

*Scarborough – Ellesmere / Morningside – Condo Apt
(2 +1 Brm + 2 Bath) Great Location. 1 Parking. Close To U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401 [Asking $2600/m]

* Scarborough – Brimley / Ellesmere – Condo Apt
(2 Brm + 2 Bth) Open Concept. 1 Parking. Walk to Ttc. Rt, Scarborough Town Ctr, Close To 401.[Asking $2350/m]

வீட்டு முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு

- வாடகைக்கு விட சரியான வீடை எப்படி தெரிந்தெடுப்பது.
- அந்த வீடுக்கான கடனை எப்படிப்பெறுவது.
- சரியான வாடகையாளர்களை எப்படி கண்டுபிடிப்பது.
- அந்த வீடை சரியாக எப்படி நிர்வகித்து கூடிய லாபம் பெறுவது.

இதற்கான கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புவர்கள்
தொடர்பு கொள்ளவும்: கரு கந்தையா: 416-284-5555
watsonpm1989@gmail.com

SEMINAR FOR INVESTORS

- How to select the right property to buy as an investment?
- How to qualify for mortgage for those properties?
- How to find the right tenant?
- How to manage the property to get high net income?

If you are interested contact us for more details! Limited Seats!
Contact: Karu Kandiah: 416-616-7278
watsonpm1989@gmail.com

MANAGING RESIDENTIAL PROPERTIES
watsonpm1989@gmail.com

# எம்மை...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

அதைப் புரிந்துகொள்வதற்கு வித்தியாச மாகச் சிந்திப்பதைச் சாத்தியப்படுத்துவ தற்கு, ஆனந்தமாக இருப்பதற்கான போராட்டத்தில் இருந்து இது இந்த வாழ்வை மாற்றும்.

நான் எதைப் புரிந்திருக்கிறேனோ அதைத் தான் என்னால் கொடுக்க முடியும். நான் புரிந்துகொள்ளாத ஒன்றை நான் உங்களுக்குத் தரமாட்டேன். உங்கள் கற்பனைகளை தாண்டி விடுவதற்காக, மோட்சம் எவ்வளவு நன்றாக இருக்கும் எனக் கூறத் தொடங்குவதற்காக நான் இங்கு வரவில்லை. இல்லை. நான் உங்களுக்குக் கூற விரும்புவதெல்லாம் மோட்சம் என்று ஒன்று இருந்தால் அது இங்கேதான் உள்ளது. நான் உங்களுக்குக் கூற விரும்பு வதெல்லாம் நீங்கள் அந்தச் சுவரைத் தொடுவதற்கு முன்னர் அதைக் கண்டுகொள்ளுங்கள். அதை அனுபவியுங் கள். ஏனெனில் அந்த சுவரின் மறுபுறத்தில் இருப்பது என்னவென உங்களுக்குத் தெரியாது. நேர்மையான உண்மை அதுதான்.

நான் உங்களுக்குக் கூறப்போவதெல்லாம், அதாவது அங்கே நரகம் ஒன்று இருக்கு மானால் அது "சனியனால்" உருவாக்கப் பட்டதல்ல. அது எங்களால்தான் உருவாக் கப்பட்டது. அத்துடன் நாங்கள்தான் அந்த நரகத்தை உருவாக்குகிறோம். இங்கே உள்ள மோட்சத்தை மீளக் கண்டுகொள்ளவில்லை.

நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள். இது ஒரு நல்லதருணம் என நான் எண்ணுகிறேன். உங்கள் வாழ்வில் அது எவ்வளவு உள்ள தென்பதை அறிய - உங்கள் உள்ளே நீங்கள் தோண்டி எடுத்து வெளியே கொண்டு வர வேண்டிய அளவு மிக அற்புதமான செல்வம் உள்ளது. நீங்கள் உள்ளே மூழ்கி தெளிவு என்னும் சுரங்கத்தை தோண்டினீர்களா? நீங்கள் முன்னெப்போதும் தோண்டாத அளவு தோண்டினீர்களா? அந்தச் செல்வச் செழிப்பையும், தெளிவு என்னும் செல்வத்தையும் அனுபவித்திருக்கிறீர்களா?

உங்கள் தெய்வீகத்தை உங்கள் உள்ளே நீங்கள் கண்டிருக்கிறீர்களா? இரக்கத்தை நீங்கள் கண்டிருக்கிறீர்களா? உங்கள் அமைதியை கண்டிருக்கிறீர்களா? உங்கள் ஆனந்தத்தைக் கண்டிருக்கிறீர்களா? உங்கள் அன்பை நீங்கள் கண்டிருக்கிறீர் களா? உங்கள் ஞானத்தைக் கண்டிருக்கிறீர்களா? ஏனெனில் அவைதான் உங்களை மனிதனாக வைத்திருக்கிறது. சண்டையிடுவதல்ல, குரங்கு களும் சண்டையிடுகின்றன. மீன்களாலும் பாம்புகளாலும் சண்டையிட முடியும்.

சண்டை பிடித்தல் உங்களை மனிதனாக் காது. உங்கள் தவறுகள் உங்களை மனிதனாக்காது. எது உங்களை மனிதனாக் குகிறது (மனிதக் குரங்கல்ல) உங்களை மனிதனாக்குவது எதுவென்றால் உங்களுக் குத் தரப்பட்டுள்ள இந்த அற்புதமான பரிசுகளான, உங்கள் உயிர் வாழ்வில் உங்களைச் சூழ்ந்திருக்கும் - தெளிவு, ஞானம், ஆனந்தம், அமைதி என்பனதான்.

உங்களுக்கு வேறு என்ன வேண்டும்? எவ்வகையிலான தெளிவு இருந்தாலும், அது எங்கிருந்து வந்தாலும், இந்த "மனிதன்" என அழைக்கப்படும் உயிரில் எங்கிருந்து வந்தாலும், அதனால் நடனம் புரிய முடியும்- அது ஒரு மேடை. இந்தச் சராசரத்தில், இந்த உலகில், எங்கிருந்து அமைதி வந்தாலும் 'மனிதன்' என்று அழைக்கப்படும் இந்த மேடையில் அதனால் நடனமாடமுடியும். அதனால் முடியும், அதனால் வெறுமனே சத்தமிட முடியும், அதனால் முடியும். ஆம்.

உயிருடன் இருப்பதில் உள்ள மிக விசேட விடயம் என்னவென்றால், நீங்கள்தான் அந்த அமைதி நடனமாடக்கூடிய மேடை. அத்துடன் நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். அத்துடன் உங்கள் மேடையில் என்ன நடனமாடுகி றது? குழப்பமா? ஏமாற்றமா? நீங்கள் உங்களி லேயே ஏமாற்றம் அடையத் தொடங்கும்போது அதன் பின்னர் எவராலும் உங்களுக்கு உதவ முடியாது. நீங்கள் செய்வீர்கள்.

'கற்பனை' என அழைக்கப்படும் இந்த விடயம் வரும்போது வர்ணம் தீட்டப்பட்ட படமொன்றுடன் வருகிறது. அத்துடன் அது ஒரு பயங்கரமான படத்தை வரைந்துள்ளது. அத்துடன் அந்தப் படத்தை நீங்கள் கொள்வனவு செய்திருக்கிறீர்கள். நீங்கள் அந்தப் படத்தை திருத்தி அமைக்க வில்லை, செம்மை செய்யவில்லை. நீங்கள் அதையும், கொழுக்கியையும், கம்பியையும், அழுத்தியை யும் கொள்வனவு செய்திருக் கிறீர்கள். அத்துடன் நீங்கள் அதுதான் எனக்குத் தேவை எனக் கூறுகிறீர்கள்.

ஆரம்பத்தில் எதையுமே சாதிக்கவில்லை என்பதை உணர்ந்திருப்பீர்கள். அந்த ஏமாற்றம் உள்ளே குடியிருக்கத் தொடங்கு கிறது. அத்துடன் அது ஒரு மிகப் பயங்கர மான ஏமாற்றம். ஏனெனில் உங்களுக்குத் தெரியும் நீங்கள் உங்களுடனேயே ஏமாற்றப்பட்டு இருக்கிறீர்கள். ஆனால் அதை உங்களிடம் எவ்விதம் வெளிப்படுத் துவது என்று உங்களுக்குத் தெரியாது.

நீங்கள் யாரோ ஒருவருடன் ஏமாற்றம் அடைந்தால் அவர்களிடம் அதை எப்படி எடுத்துக் கூறுவது என்று உனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் உங்களுடன் ஏமாற்றம் அடையும்போது அதை உங்களிடம் எவ்விதம் எடுத்துக் கூறுவது என்று உங்களுக்குத் தெரியாது. அத்துடன் அந்த நாள்தான் நீங்கள் உங்களுடன் சண்டையிட ஆரம்பிக் கிறீர்கள். அந்த நாள் - நான் கூறுவதை நீங்கள் கேட்கவேண்டிய நாள் அந்த நாள்தான். "உன்னையே நீ உணர்வாய், உங்களுடன் யுத்தம் புரிய வேண்டாம், உங்களை அறிந்து கொள்ளுங்கள்".

உங்களுடைய விருப்பங்களை நிறைவு செய்யும் உபகரணமல்ல நீங்கள். நீங்கள் "அலடீன்" விளக்கும் அல்ல. (உங்கள் பெயர்கூட அலடீன் இல்லை) அது உங்கள் தொழில் அல்ல - சுற்றி வரச் சென்று உங்கள் வாழ்வு எப்படி இருக்க வேண்டும் என பெருமைப்படுவது பின்பு அதை உண்மையாக்கத் தெண்டிப்பது, வாழ்வைப்பற்றியதெல்லாம் அதுவல்ல. இது இந்த மோட்சத்தைப் பற்றியது - அந்த மோட்சம் - அத்துடன் இந்த மோட்சம் உங்கள் உள்ளேயே உள்ளது.

அமைதி ஒரு நல்ல செய்தி. அது உங்களுக்குத் தெரியும் பயத்துடன் நீங்கள் வரும்பொழுது எதையுமே செய்ய முடியாது. அந்தப் பயத்தை எடுத்து விடுங்கள். அப்பொழுது அற்புதமானதொன்று நடை பெறும். அத்துடன் அதை நீங்கள் உங்கள் வாழ்வில் செய்யவேண்டும். உங்கள் வாழ்வில் அமைதியைக் கொண்டாடுங்கள். அந்த உயிர்வாழ்வைக் கொண்டாடுங்கள். ஏனெனில் நீங்கள் மிகவும் பாக்கியசாலி.

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

Avail. immediately.

தொடர்புகளுக்கு:

**647.296.7932**

## திருமணசேவை

திருமண

சேவைக்கு

தொடர்பு கொள்ளவும்

**905.607.3896**

## HAIR SALON FOR SALE

Location: **Brimley & Eglinton**

Sale: Equipment, Tools, Supplies and Client List

21+ Years in Business

650+ Regular Clients, Plus Walk-ins

Contact for Further Details

Tel: **416-768-8673** Email: **Kumari_Madu@hotmail.com**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

தொடர்புகளுக்கு: பிறேம்-**647.835.5244**

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.

**416.890.6497**

**srisai2912@hotmail.com**

## EYE CARE NEEDS

**EYE CARE NEEDS: 1939 Kennedy Rd., Scarborough**

- Tamil doctor and staff available
- Open 7days and take all plans for glasses & contact lens
- Care for all including seniors & kids with free eye exam
- Appointments can be booked immediately

**Please call 416-434-6189**

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA.

Need 1-year experience and clean CVOR and abstract. Weekly Pay .

For more info call : **647.274.0300**

## TAILORING

**SCARBOROUGH**இல்

Saree Blouses $25க்கு

தைத்துக் கொடுக்கப்படும்.

**V G Tailors:**

**647.621.3694**

## SENIORS CARE NEEDS

**SENIORS CARE NEEDS: GTA and Area**

- Immediate home care service available
- Intake for housing available for September
- Rates are flexible & Tamil staff available • For all care needs

**Please contact 416-434-6189**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**


**வாழ்க்கை நமக்குப் பல பாடங்களை கற்றுத் தருகிறது. அதில் ஒன்றுதான் யார் யாரிடம் எப்படி பேசவேண்டும் எப்படி பழகவேண்டும் என்பது...!**


## வேலைக்கு ஆட்கள் தேவை

**PRK DOOR & WINDOWS**

தொழிற்சாலை மரவேலையில் அனுபமுள்ள

தொழிற்சாலைக்கு மரவேலையில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **416.875.4119**




Math tutorial413

Answers to tutorial412

1)The number of strings with 3 ,1s in the first 5 terms and 3, 1s in the last 5 terms is $\pi\binom{5}{3}.\binom{5}{3}$ =100

2)There will be 26+26+10 =62 symbols available a)Each- - - - - - - - position can be any of the 62 symbols (with repetition) hence there will be $68^8$ possible passwords (b) 10 - - - - - - 10 The first and last position have 10 choices .The remaining positions have any of the 62 symbols .Hence there are $62^6 x10^2$ pass words

3)A line through the origin parallel to AB ,A(4 ,3 ,1 ),B(-2 ,-4 ,3 ) has direction $\overline{BA}$ =(6 ,7 , -2)

And symmetric equation is

x/6=y/7 =z/-2

4)A plane has eqn.r =(a ,b ,c )+s(d ,e ,f ) +t (a ,b ,c ) .If s=0 and t = -1 , r = (0 ,0,0) ,hence the plane passes through the origin.

Tutorial 413

Questions

1)Express using absolute notation

a)x <-3 or x>3 (b) -8≤ x ≤ 8

©x≤-1 or x≥1

2)A student writes "The inverse of y = - √(x +2) is y= $x^2$ -2 ". Explain why this statement is not true

3)Do you have to restrict either the domain or the range of this function y= √(x+2) to make its inverse a function?Explain

4)Determine the vector equation of each of the following planes

a)the plan ||$^{el}$ to theyz plane containing the point( 6, 4 ,2 )

b)the plane containing the origin and the points (3, 3 ,3 )and (8 ,-1 ,-1 )


c)the plane containing the x-axis and the point (-1 ,-4 ,,-7)

ByMr.S.F.Xavier(Teacher) tel6473409490/4167322228

# ஆழியவளை

**தொடர் கட்டுரை**

**யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்**



கந்தசாமி முத்துராஜா

## பிழைப்பும் உழைப்பும்

கடந்த இதழ் தொடர்ச்சி

### உ. சிறுகடல் வீச்சு

யாழ்ப்பாணக் கடல்நீர் ஏரி, யாழ்ப்பாணக் குடாநாட்டை இலங்கையின் தென் பாகத்திலிருந்து பிரித்துவைத்துள்ளது. இது மேற்கே பாக்கு நீரிணைக் கடலுடனும் கிழக்கே சுண்டிக்குளம் தொடுவாய் ஊடாக, வங்காள விரிகுடாக் கடலுடனும் இணைந்துள்ளது. இந்த உப்புநீர்க் குடாக்கடல் ஏரியில் மீன்வளம் செறிந்துள்ளது. இந்நீர்ப்பரப்பை ஊடறுத்து அணைகட்டித் தென்னிலங்கையையும் யாழ். குடாநாட்டையும் இணைத்து, ஆனையிறவுப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆனையிறவுப் பாலத்துக்குக் கிழக்கே சுண்டிக்குளத் தொடுவாய் வரையிலுள்ள கடற்பரப்பைச் 'சிறுகடல்' என்றழைப்பர். ஆழியவளைக் கிராமத்தில் இருந்து தெற்கே சுமாராக எட்டு மைல் தூரத்தில் இச்சிறுகடல் உள்ளது.

உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக் கேணிக் கிராம மக்களுக்குச் சிறுகடல் வீச்சு (Shallow water fishing) 1950களுக்கு முன்னர் மாரிகாலத்தில் சுமாரான வருமானத்தைத் தேடிக்கொடுத்த ஒரு மரபுத்தொழிலாக இருந்தது. சிறு கடலுக்குள் ஆழங்குறைந்த பரப்புக்கடற் பகுதி ஒன்றுண்டு. இதை 'நெருக்காறு' என்று சொல்வர். சிறுகடலுக்கு வடக்கே புல்லாவழி மாதா கோயிலுக்கு அண்மையில் ஐந்து பனைமரங்கள் நெருங்கி நிற்கின்றன. இதனை 'ஐந்து பனை எல்லை' என்று குறிப்பிடுவர். இந்தப் பனைகளைக் குறிப்பு வைத்தே வீச்சுக்காரர் கால்நடையாக நெருக்காறு போய்ச்சேர்வர். நெருக்காறு என்பது மீன்செவ்வல் கொதிக்கும் இடமாகும். மீன்செவ்வல் நல்லாய்க் கொதிக்குது என்பதன் பொருள்: அந்தக் கடற்பகுதியில் கண்ணுக்குத் தெரியக்கூடியதாக மீன்கள் நெருக்கமாகத் துள்ளிப் பாய்வதைக் குறிப்பதாகும். செவ்வல் என்பது சிவந்த மண்ணைக் குறிப்பதாகத் 'தமிழ் லெக்சிக்கன்' கூறும். சிறுகடலிலும் பெருங் கடலிலும் மீன்கள் கூட்டமாகத் தொகை யாக கரைநோக்கி வரும்பொழுது அல்லது பொதுவிலே பெருங்கூட்டமாகச் செல்லும் பொழுதும் குறிப்பாக மேல் தண்ணீருக்கு மிக அண்மித்ததாக வந்து மிதக்கும் நிலையில்கடல்நீரில் ஒரு சிவப்புத் தன்மை பாயும். இதனையே 'செவ்வல்' என்பர்.

இவற்றை வீச்சுக்காறர் ஓடி ஓடி வீசுவர். பெரிய மீன்களை ஓடித்துரத்தி மண்டாவினால் குத்திப் பிடிப்பர். மண்டா என்பது மீன், பன்றி முதலியவற்றைக் குத்த உதவும் ஈட்டிவகை என்று 'தமிழ் லெக்சிக்கன்' கூறும். மண்டாத்தொழில் என்பது மிருக வேட்டை போன்ற ஒருவகை யான மீன் வேட்டை ஆகும். மீன் பிடிப்பதில் ஆழிய வளையில் பிரசித்தி பெற்று விளங்கிய வீச்சுக்காரர்: கறுத்தாருடைய சின்னத்துரை, க. முருகுப்பிள்ளை, மீசைக்குன்னியர், வே. பெரியதம்பி என்போராவர். இவர்கள்தான் 'காலை' மீனைப் பிடிக்கும் வலையையும் வைத்திருந்தனர்.



இவ்வலை தடிப்பான நூலால் முடித்து (பின்னுதல்) வலையைச்சுற்றி ஈயம் கட்டப் பட்டிருக்கும். 'காலை' என்ற மீன் பலம் கொண்டது. அது சாதாரண வீச்சு வலையை, இலகுவாகத் தனது வாயால் கடித்து இடறிச் சென்றுவிடுவது வழக்கம். எனவே, அவற்றை இந்தக் காலை வலை யால்தான் வீசிப்பிடிப்பர். காலை வலையை யும் அறுத்துக் கொண்டோடும் பெரிய மீன்களைத் துரத்தி மண்டாவினால் குத்திப் பிடிப்பர். மிகப்பெரிய காலை மீன்கள் சில, உடலில் மண்டா ஏறியபடி ஆழமான கடலுக்குள் ஓடிச்சென்று விடுவதும் உண்டு. இதனால் வீச்சுக்காரர் சிலர் தமது மண்டாவை இழந்துவிடுவதும் உண்டு. ஆழங்குறைந்த நடுக்கடலுக்குள் 'சிறாம்பி' (பரண்) கட்டி அதன்மேல் கூரை வேய்ந்து வீச்சுக்காரர் இருப்பர். ஓய்வு நேரங்களில் சிறாம்பியில் நித்திரை கொள்வர்.

கார்கால முடிவாகிய புரட்டாசி மாதம் ஆரம்பித்ததும் சிறுகடலில் வீச்சுக்காரர் குழு குழுவாகச் சிறாம்பி கட்டுவர். ஒரு குழுவில் அனேகமாக நால்வர் இணைந் திருப்பர். சிறுகடலில் பிடிக்கப்படுவன கொய், மணலை, காலை, விரால், திரளி, சுறா, பாலமீன் வகைகளாகும். குழுவி லுள்ள இருவர் மீனை வீசிவீசிக் கரையில் சேர்க்க, மற்ற இருவரது வேலை, மீன் பறிகளைத் தோளில் காவிச்சென்று ஊரில் அவரவர் வீடுகளில் சேர்ப்பதும், பின்பு அவரவர் வீடுகளிலிருந்து நெருப்பில் வாட்டிய பச்சைப் பனையோலைப்பிழாவில் பொதிசோறு பெற்று அவற்றைச் சிறு கடற்கரைக்குக் கொண்டு செல்வது மாகும். ஊரில், வீட்டிலுள்ள மனைவிமார் மற்றும் பெண்கள் மீன்களைக்கிழித்து உப்புப்போட்டுக் கருவாடாக்குவர். பெண்கள், கருவாட்டைக் 'கறிப்பெட்டிக்' கடகங்களில் தாமே எடுத்துச்சென்று கிளிநொச்சி, பரந்தன், பளை, கொடிகாமச் சந்தைகளில் விற்பனைசெய்து, வீட்டுக்குத் தேவையான பண்டங்களுடன் மீளுவர்.

1950ஆம் ஆண்டுகளில் ஆனையிறவுப் பாலத்தின் மதகுக் கண்களை அடைத்து மேற்கேயுள்ள யாழ். கடல் ஏரியின் நீர், கிழக்கே பாயாதபடி புதியபாலம் கட்டப் பட்டது. இதனால் பெருங்கடல் மீன்கள் சிறுகடலுக்குள் உட்புக முடியாத நிலை ஏற்பட்டது. இந்தக்கட்டுமானச் செயற் பாடானது ஆழியவளை உட்பட்ட கடலோ ரக் கிராமங்களில் வாழும் மக்களின் 'சிறு கடல்' மீன்பிடித் தொழிலுக்கு முற்றுப் புள்ளி வைத்தது. எதிர்காலத்தில், வடக்குக் கிழக்கு இலங்கை மக்களின் பொருளாதார மீட்டுருவாக்கத்தின் போது சிறுகடல் மீன்பிடிபற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

### ஊ. கழிவீச்சு

நிலம் சேறுசுரியுள்ளதும் ஏறத்தாழத் தொண்ணூறு விழுக்காடு நன்னீரும் (மழைநீர்), பத்து விழுக்காடு உப்புநீரும் கொண்ட பரந்த நீர்நிலை 'கழி' என்ற இயற்கைப் பெயரால் அழைக்கப்படுகின் றது. இத்தகைய நீர்ச்சுவாத்தியத்தில் விரால், சள்ளை, முரல், யப்பான் போன்ற இருநீர்க்கலப்பு மீன்கள்தான் வாழும். ஆழியவளைக்குத் தெற்கே அமைந்துள்ள இத்தன்மையான நீர்நிலையை 'வீரக்கழி ஆறு' என்று அழைப்பர்.

வீரக்கழி ஆறு, தொண்டமானாற்றில் ஆரம்பித்துத் தென்கிழக்காக நீண்டு ஆழியவளை-வெற்றிலைக்கேணி, ஊரெல்லையில் முடிவடைகின்றது. தொண்டமானாறு தொடக்கம் ஆழிய வளைக்கு இடையிலுள்ள கிராம மக்கள் பலரின் முன்பனி, பின்பனி காலச் சீவி யத்தை வீரக்கழி ஆற்று மீன்வளம் பூர்த்தி செய்கின்றது. பண்டைக் காலங்களிலும் கழியில் மீன்பிடிக்கப்பட்டமை பற்றிக் கூறப்படுவதாவது: "பரதவர்கள் கடலில் மீன் பிடிப்பதோடு கழிகளிலும் மீன் பிடிப்பர். கழிகளிலும் சுறா மீன்கள் திரிவ துண்டு. வேறுசில மீன்களும் கழியில் நிறைய வாழும். கடலில் மீன் பிடிக்கும் வலையைவிடக் கழிகளில் மீன்பிடிக்கும் வலைகள் மாறுபட்டவை. கழியில் பயன் படும் வலைகளில் நேரிய சிறு கோல் களைப் பொருத்திப் பிணைப்பர். அக் கோல் வலை மடிந்துவிடாமல் விரித்துப் பிடித்திருக்கும். விரிந்திருக்கும் வலையில் மீன்களும் இறால்களும் சென்று சிக்கிக் கொள்ளும்" (சசிவல்லி.வி.சி 1989: 131-132).

சங்ககாலத்திலேயே கழிகளில் மீன் பிடித்தமைக்கான ஆதாரங்கள் கூறப் பட்டுள்ளன. வலைகளில் கோல்களைப் பொருத்திக் கோல்களை நிலத்தில் நாட்டி, மீன்பிடிக்கும் முறையைக் 'களங்கட்டி' என்ற யாழ். குடாநாட்டில் அழைப்பர். கழியில் மீன்பிடித்த செய்திகளைப் பின்வருமாறு சில சங்கப்பாடல் பதிவுகளும் தெரிவிக்கின்றன.

இருங்கழி முகந்த செங்கோல் அவ்வலை
முடங்கபுற இறவொடு இனமீன் செறிக்கும்
நெடுங்கதிர் கழனித் தண்சாய்க் கானத்து
(அகம் 220: 16-18)

கரவெட்டியை வாழ்விடமாகக்கொண்ட மீன் பிடிக்கும் மக்கள் தட்டிவான் எனப்படும் மோட்டார் வாகனங்களில் வந்து, இழுவைக் களங்கட்டி வலைகளைக் கொண்டு வீரக்கழி ஆற்றில் மீன் பிடித்துச் செல்வது மரபு. ஆடி மாத வறட்சிக் காலத்தில் இந்நீர்நிலை பெரும்பாலும் வற்றிவிடும். அவ்வேளையில் மீன்கள் துடிதுடித்து இறக்கும். இந்தக் கழியின் இருமருங்கிலும் கண்டல், தாழை, சம்பு, முள்ளி போன்ற நெய்தற்செடிகள் படர்ந்திருக்கும். ஆற்றின் தெற்கேயுள்ள அடர்ந்த பெருங்காட்டைக் 'கழிக்காடு' என்றே அழைப்பர்.

---

# கற்றுத்தந்த பாடம்!

விட்டுவிடு என்றால் விட்டுவிட மாட்டார்
செத்திடுவாய் என்றால் செவிமடுக்க மாட்டார்
தொற்றிவந்த கொரோனா கற்றுத்தந்த பாடம்
விட்டுவிட்டு விலகி நிற்கவைத்த திப்போ!



மதுவருந்தும் பலபேர் மாறிவிட வைத்து
புகைவிரும்பும் பலபேர் அதைநினையா நிற்க
தனிமை எனும்பாடம் தந்ததிந்த கொரோனா
அதுவெமது வாழ்வில் அதிகநன்மை யன்றோ!

சூழல் தூய்மையாக துணையாக நின்று
வீடு கோயிலாக ஆகிவிட வைத்து
பாடசாலை வீட்டில் புகுந்திடவே வைத்த
பாடமது எமக்கு நல்திருப்பம் அன்றோ!

கடை உணவெமது வயிறடையா வண்ணம்
வீட்டுணவு உடலைக் காத்திடவே வைத்து
கூட்டமதில் இணையா குடும்பதில் இணைய
காட்டி நின்றபாடம் கருத்தினிலே கொள்வோம்!

கிண்ணமதில் மதுவை ஊற்றித்தரும் கடைகள்
கிளர்ச்சியுடன் நடனம் ஆடிநிற்கும் இடங்கள்
அத்தனையும் மறக்க அமைந்திந்த தனிமை
கற்றுத்தந்த பாடம் கருத்தேற்றி வைப்போம்!

சாதியெனும் சண்டை தனையிழந்து போக
மதபேதம் அதனை மனமெண்ணா நிற்க
காதலுடன் குடும்பச் சூழலெமை கௌவ
கற்றுத் தந்தபாடம் கருத்தை விட்டுபோமா!

அயலவரின் தொல்லை எமக்கு வரவில்லை
ஆசாரம் வீட்டில் அனுசரித்தே நின்றோம்
விழிப்புணர்வு மனதை நிறைத்தபடி இருக்க
கற்றுத் தந்தபாடம் அர்த்தமுள தன்றோ!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

# புதிய புத்தகங்கள் - திரைப்படங்கள்

– ரதன் –

## காச்சர் கோச்சர்


### - விவேக் ஷான்பாக்

கோப்பிக் கடைக்கும் எமது வாழ்விற்குமிடையில் நெருக்கமான தொடர்பு உண்டு. அவ்வாறான ஒரு கோப்பிக் கடையில் இருந்து தனது வாழ்க்கையை கதை சொல்லி மீட்கின்றார். பொருளாதாரம் என்பது, ஒரு குடும்பத்தினது, நாட்டினது அடித்தளம். இன்றைய சிக்கலான கால கட்டத்தில் உலகின் சகல நாட்டினது அரசுகளும், தங்களது மக்களுக்கான பொருளாதார சலுகைகளை அறிவிக்கின்றன. அதனூடாக மக்களை வீட்டை விட்டு வெளியேறாமல் பாதுகாக்க அரசுகள் முனைகின்றன. இந்த அரசுகள் சலுகைகளுக்கான பணத்தை எவ்வாறு பெறப் போகின்றன? நாளை கொடுத்த பணத்துக்காக வியாபார வரிகளைக் கூட்டலாம், வருமான வரிகளை அதிகரிக்கலாம். மக்களுக்கு தற்சமயம் நிவாரணம் கிடைக்கின்றது. அதுவே தற்சமயம் முக்கியமாகவுள்ளது.

கதைசொல்லியின் குடும்பம் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வந்தது. குடும்பத் தலைவனான கதைசொல்லியின் தகப்பனுக்கு, திடீரென வேலை இழப்பு ஏற்படுகின்றது. பொதுவாகவே ஒருவரை வேலை நீக்கம் செய்யும்பொழுது, பல நிறுவனங்கள் “உங்களுக்கு ஒரு புதிய எதிர்காலம்” வெளியே உங்களை வரவேற்கின்றது என்பர். ஆனால் கதைசொல்லியின் தகப்பனார், வேலை நீக்கத்தில் கிடைக்கும் மொத்த பணத்தையும், திருமணமாகமால் குடும்பத்துடன் வாழும் சித்தப்பாவிடம் கொடுக்கின்றார். அவர் ஆரம்பித்த வியாபாரத்தில், கதைசொல்லியின் குடும்பத்திற்கு ஐம்பது வீதம் சொந்தமாகின்றது. சித்தப்பாவை திருப்திபடுத்தி குடும்பத்தினுள் வைத்திருக்க, அக் குடும்பம் பலவாறு முயற்சிக்கின்றது. சித்தப்பா தனது வியாபாரத்தை பெருக்க அதிகாரிகளை நன்கு கவனித்துக் கொள்கின்றார். செல்வம் பெருக, பெருக இவர்களது நடிவடிக்கைகளிலும் மாற்றம் ஏற்படுகின்றது. புதிதாக சித்தப்பாவைத் தேடி வரும் பெண்ணை பலாத்காரமாக வெளியேற்றுகின்றது.

கதை சொல்லியின் மனைவி, ஒரு முன்னாள் என்.ஜி.ஓ (அரச சார்பற்ற நிறுவனம்). இவர் குடும்பத்தினுள் நடைபெறும் பல விடயங்களை எதிர்க் கின்றார். இவர் தனது பெற்றோரின் வீட்டிற்கு ஹைதராபாத்துக்கு செல்கின்றார். அதன் பின் ஒரு வாரத்தில் வீடு திரும்ப வேண்டியவர் திரும்பவில்லை. மீண்டும் வருவாரா? அவருக்கு என்ன நடந்தது? அவர் ஏன் வரவில்லை. கதைசொல்லி கோப்பிக் கடையில் தொடர்கின்றார்.

இக்குடும்பத்தினுள் நடைபெறுவதனையே நாடுகளும் செய்கின்றன. செல்வந்த நாடுகளிடமிருந்து சலுகைகள் பெறுவதற்காக, கடன் பெறுவதற்காக அந்த நாடுகளுக்கு தங்களது வளங்களை




தானமாகக் கொடுக்கின்றன. செல்வந்த நாடுகளும் தங்களது செல்வங்களை பாதுகாக்க என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அவற்றை எடுக்கின்றன. அறமற்ற கதைசொல்லி, அவரது தகப்பன், தாய், சித்தப்பா, அக்கா மாலதி ஆகியோரே குடும்ப பிரதிநிதிகளாக உள்ளனர். இவ்வாறான சமூக மனிதர் எவ்வாறான கற்பிதங்களை எம் முன் வைக்கின்றனர்? சுரண்டலின் ஆரம்பமே இங்குதான் ஆரம்பமாகின்றது.

ஒரு என்.ஜி.ஓ குடும்பத்தினுள் வரும் பொழுதே, குடும்ப அமைப்பினுள் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. கதை சொல்லியுடன் ஊட்டியில் தங்கியிருந்த போது, ஓர் எறும்பை கதை சொல்லி நசுக்கியதற்கு, தனது எதிர்ப்பை தெரிவிக்கின்றார். கதைசொல்லியின் மனைவி யான அனிதாவின் பாத்திரப் படைப்பு முக்கியமானது. குடும்பத்தினுள் நடைபெறும் ஒவ்வொரு அசைவையும் அனிதா கேள்வி எழுப்புகின்றார். இன்று பல நாடுகளின் அரசுகள் என்.ஜி.ஓ க்களைக் கண்டு நடுங்குகின்றன. பொருளாதாரம் என்பது சமூக, குடும்ப நிர்ணயக் காரணியாகவுள்ளது. அதுவே குடும்ப உறவுகளை தீர்மானிக்கின்றது. அது அதிகார பலத்தையும் கொடுக்கின்றது. இதே அதிகாரம் ஒழுக்க மையங்களையும் தீர்மானிக்கின்றது.

கதை சொல்லியின் முன்னாள் காதலி சித்திரா, மனைவி அனிதா இருவரும் முற்போக்கு சிந்தனை கொண்ட பெண்களாக சித்தரிக்கப்படுகின்றனர். இவர்கள் இருவரும் இங்கு அந்நியப்பட்டே உள்ளனர். இக்குடும்பத்தினுள் இருந்து வெளியேறுகின்றனர். இந் நாவலுக்கான எதிர்வினையாக இவ்விரு பாத்திரங்களும் உள்ளன. குடும்ப அமைப்பை உடைப்பதன் மூலமே ஒரு சீரிய சமூக அமைப்பு சாத்தியப்படும் என்பதனை நாவலாசிரியர் நிறுவ முற்படுகின்றாரா?

காச்சர் கோச்சர் என்பது ஒரு சிக்கலான முடிச்சு என்பதனைக் குறிக்கும். இச்சொல் அனிதாவின் குடும்பத்திலேயே முதன் முதலாகப் பாவிக்கப்படுகின்றது. கொரோனாவும் இப்பொழுது ஒரு காச்சர் கோச்சராகும்.

கிரீஷ் கர்னாட் குறிப்பிட்டது போல் கடந்த பத்து பதினைந்து வருடங்களில் வெளி வந்த மகத்துவமான புனைகதை காச்சர் கோச்சர். விவேக் ஷான்பாக் கின் மற்றைய நூல்களையும் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். கே. நல்லதம்பியும், காலச்சுவடு பதிப்பகமும் இதனை சாத்தியப்படுத்துவர் என நம்புகின்றேன்.

நன்றி - மார்க்கம் மாநகர நூலகம்

## தேர்தல் திருவிழா

இலங்கை நாடாளுமன்ற தேர்தல் அமர்க்களமாய் ஆரம்பம்
அனைத்து இனங்களின் கட்சிகளும் சுறுசுறுப்போடு களத்தில்
வேட்புமனுத்தாக்கலும் வேட்பாளர் தெரிவு
கூட்டணிகள் அமைப்பதும் தேசியக் கட்சிகளோடு
பேரம் பேசுவதும் அனல் பறக்கும் அறிக்கைகளும்
குத்துக்கரணங்களும் குத்து வெட்டுக்களும் தொடங்கும்
இனி என்ன கட்சித் தாவல்களோடு கோடிகளும் புரளும்
இலவசமாய் உணவுப் பார்சல்களும் குளிர்பானத்தோடு
வெறிபானங்களும் வழங்க அதிகார மட்டத்தில் தூதர்களின் பயணங்களும்
இராஜதந்திரிகளின் சந்திப்புக்களும் வட்டமேசை
சதுரமேசை மாநாடுகளும் ஏக விளம்பரத்தோடு நடைபெறும்
அத்தோடு பேரினவாதம் பெரும் பூதமாய் கிளம்பி
கோரத்தாண்டவம் ஆடும் சர்வதேச தீர்மானங்களை
கிழித்தெறிந்து புதிய அரசியலமைப்பு வரும் என நாடகமும் போடும்
வடக்கே முன்னணி மக்கள் கூட்டணி கூட்டமைப்பு
கழகம் என்று வெறும் காட்சிக்காகவே கட்சிக் கடைகள்
பல திறந்து தமிழரை அக்கு வேறு ஆணி வேறாய்
சிதைப்பதற்கு என்றே தேர்தல் களத்தில் குதிப்பு
தமிழர் வாக்குகளே தீர்மானிக்கும் சக்தி என்றும்
எம்மில் கூடுதலானோரை மன்றுக்கு அனுப்புங்கள்
உரிமைகளை வென்று தருவோமென



பழைய பல்லவியை பாடி வாக்குக் கேட்டு வருவர்
ஊருக்குள் சந்து பொந்துகள் எல்லாம் வாத்தியாரின்
சினிமா பாடல்கள் ஒலித்த வண்ணம் ஊர்வலம்
வந்து புதிதாய் நலம் விசாரித்து முதியோரை கொஞ்சி
சிறுசுகளையும் கும்பிட்டு வாக்குக்கு இறைஞ்சுவர்
தீர்வு வருகுது தீபாவளியோடு தீர்வு வருகுது என
மேடை போட்டு வீரவசனம் பேசி முழங்குவர்
ஆக, தமிழினம் சரியான தலைமையை அமைக்க
விழித்துக் கொள்ளாத வரை வால் அறுந்த பட்டமாக
கரைசேரா படகாய் தத்தளிப்பது நிதர்சனம்!



ச.அன்ரன் இராசநாயகம்

## ஆடி கூழும் கொழுக்கட்டையும்....!

ஆடி பிறந்தது ஆடி பிறந்தது
ஆனந்தம் ஆரம்பமே
கோடி நன்மையை மாந்தருக்குக்
கொணர்ந்து தருவதும்
மூடிய தீமைகள் முழுமையாய்
முடிவுற விலகிச்செல்வதும்
ஆடியின் மகத்துவமே மண்ணில்
அனைவரும் சமத்துவமே!

ஆடித்திருநாளும் தேடியேவந்தது
அனைவர்க்கும் ஆனந்தமே
கோடி கோடியாய் செல்வம்குவிந்திட
கொஞ்சும் அழகுறு வாழ்வுமுயர்ந்திட
மாடிமனையொடு மனையறமோங்கிட
மகிழ்வுடன் அமைதியும் தேங்கிட
நாடியேவந்தது நன்மைகள் தந்திட
நாம் போற்றிடும் ஆடியும்பிறந்தது!



ஆடிப்பிறப்பு
16.07.2020

நெடிய கருமேகங்கள் மோதிட
நிலத்தினில் கொட்டுது மழையே
வாடிவரண்ட வயல்களெல்லாம்
வளமுற்றுச் செழிப்புறவே
ஓடிவந்தது ஆடிவெள்ளமும்
ஓசையெழுப்பியே ஆற்றினிலே
கூடி உழவர்கள் உளம்மகிழ்ந்தே
உறுபணி செய்திடவே!

ஆடிக்காற்றெழ அம்மியும் நகருமே
ஆனியில் வாட்டிய வெப்பமும் அகலுமே
வேடிக்கையாக மாலைப்பொழுதினில்
விளையாட்டாகப் பட்டங்களேற்றியே
கூடிக்களிப்புறும் இளம்குஞ்சுகள் தம்மின்
கூச்சலைக் கேட்டே மாலையுமிருளுமே
ஆடிக்கூழும் கொழுக்கட்டையும்
ஆவலைத் தூண்டும் ஆயுளும் நீளுமே!

பச்சை பசேலென மண்ணில்நெற்
பயிர்கள் வளர்ந்துபெரும்
இச்சையைத் தரும்போதில்
இயல்பாய் இறைதனைநாடியே
பேச்சைக் குறைத்து பெருமனமுருக
பேணுதல்செய்வீர்
யாவையுமென்றே
பிச்சையாய் வேண்டிப்பெறுதலும்
பிழையெனக் கொள்ளாரிங்கு!

ஆடி பிறந்தது ஆடி பிறந்தது
ஆர்த்தன ஆலய மணிகளுமே
ஆடிப்பூரமும் அமாவாசை விரதமும்
ஆற்றலைத் தந்திடுமே
நாடி நரம்பினில் நல்லருள்சேர்ந்திட
நம்மிடர் தீர்ந்திடுமே
தேடி நீர்நிலை பிதிர்தர்ப்பணமாற்றிட
தேடிய பாவங்கள் தொலைந்திடுமே



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# ஒரு குயிலும் 2 கோட்டான்களும் - திரைவிமர்சனம்



ஞா. ஆரணி

ஜுன் 2020 மாதத்தில் You Tubeஇல் வெளியிடப்பட்ட இப்படம் அவுஸ்திரேலியாவில் இருக்கும் தமிழரால் தாயாரிக்கப்பட்டது.

ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் ஒரு காரில் பயணிக்கின்றனர். அந்தக் கார் விபத்துக்குள்ளாகும் போது காரில் இருந்து மூவரும் வெளியே தூக்கி எறியப்படுகின்றனர். அவர்களை காப்பாற்றும் காவல்துறை மற்றும் மருத்துவர்களுக்கு இவர்களது அடையாளம் தெரியவில்லை. இவர்களில் இருவருக்கு நினைவு திரும்பும்போது அவர்களுக்கு தம்மைப் பற்றிய ஞாபகம் ஒன்றும் இல்லை.

இந்த மூவரும் யார் எனக் கண்டுபிடிப்பது தான் மீதிக்கதை. அதை படத்தைப் பார்த்து அறியுங்கள்.

அர்ஜுன், சிவா, திவ்யா என்ற இந்த மூவரில் இருவர் காதலர்கள் என விசாரணையில் அயலவர் ஒருவர் சொல்கின்றார். இன்னொருவர் இவர்கள் மூவரும் சகோதரர்கள் என்று சொல்கின்றார். இதில் எது சரி என்று படம் ஆராய்கிறது.



அர்ஜுன் விபத்தில் ஏற்பட்ட காயங்களால் இறக்கும்போது அவரது இதயம் வேறு ஒருவருக்கு வழங்கப்படுகிறது. அந்த வேறு ஒருவரிடம் சிவா, அர்ஜுனும் திவ்யாவும் காதலித்ததாகக் கூறுகிறார். அர்ஜுன் போலவே இருக்கும் அவர் ஞாபகமறதி உள்ள திவ்யாவை கல்யாணம் செய்யுமாறு சிவா சொல்லுகிறார். ஆனால் இது உண்மை அல்ல எனப் பிறகு தெரிய வருகிறது.

இப்படத்தின் கதையும் காட்சிகளும் தரமாக எடுக்கப்பட்டுள்ளன. நடிகர்களுக்கு நகைச்சுவை நடிப்பு சிறப்பாக வருகிறது. இதனால் படத்தில் கதைக்குப் போதிய நேரம் அளிக்கப்படாமல் நகைச்சுவைக்கு அதிக காட்சிகளில் நேரம் செலவழிக்கப்பட்டுள்ளது.

படத்தில் கதையை விபரிக்கும் காட்சிகள் குறைவாக இருப்பதால் படம் விறுவிறுப்பு இல்லாமலும், சுவாரசியம் இல்லாமலும் செல்கிறது. படம் முடியும் நேரத்தில் விறுவிறுப்பாக முடிகிறது. இப்படத்தின் கதை சிறந்த கதையாக இருக்கிறது. படத்தில் நகைச்சுவைக் காட்சிகளைக் குறைத்து கதையை விபரிக்கும் காட்சிகளைக் கூட்டியிருந்தால் படம் சிறப்பாக இருந்திருக்கும் எனக் கூறலாம்.

இறுதியில் திவ்யா நினைவு திரும்பிக் கூறும் கதைக்கும் அவள் எடுக்கும் முடிவிற்கும் அதிக நேரம் அளிக்கப்பட்டு இருந்தால் படம் நல்ல கதையுடன் கூடிய மக்களுக்கு அறிவுரை வழங்கும் ஒரு நல்ல படமாக அமைந்திருக்கும்.




எம்மவர் படத்தயாரிப்பில் முன்னேறி வருவதை இப்படத்தின் தரம் எடுத்துக் காட்டுகிறது. நாங்கள் எல்லோரும் இவ்வாறான எம்மவர்களது படங்களைப் பார்த்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

# யாரையும்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

தெரிவிக்கவில்லை. அவர்கள்தான் விலகி நிற்கின்றனர். ரொம்ப வருடம் பேசாத உறவினர்கள்கூட, இப்போது என்னிடம் பேசியிருப்பது ஆறுதலைக் கொடுக்கிறது.

அம்மா, அப்பா, அண்ணன், தங்கைகள் மீதான என் அன்பு உண்மையானது. பேசவில்லை என்றால் அன்பு இல்லாமல்



போய்விடுமா? பொய் என்றாகிவிடுமா? ஆனால், அவர்கள் என்னுடைய அன்பை ஏன் புரிந்துகொள்ளவில்லை. ஏன் என்று தெரியவில்லை. வருத்தம்தான். இப்போது அப்படியே விட்டுவிட்டேன். என்னைப்பற்றி யாராவது கேட்டாலும் நிராகரிக்கிறார்கள். நான் ஒருத்தி இருக்கிறேன் என்பதை மறக்க நினைக்கிற மாதிரி நடிக்கிறார்கள். நான் கஷ்டப்படும்போது உதவி செய்யவில்லை, ஆதரவு தெரிவிக்கவும் இல்லை.

**உங்கள் அண்ணன் அருண் விஜய் இப்போது பெரிய நடிகராகிவிட்டார். எப்படி பார்க்கிறீர்கள்?**

அவருடைய வெற்றிக்கு நான் எவ்வளவு பாடுபட்டிருக்கிறேன், எவ்வளவு உதவிகள் செய்திருக்கிறேன் என்பது அவருடைய மனசாட்சிக்குத் தெரியும். குடும்பத்திற்கும் தெரியும். நிறைய விஷயங்கள் நான் சொல்லாமல் இருக்கவே மக்களுக்கு வெளியில் தெரியவில்லை. அவர் கடின உழைப்புக்கு பலன் கிடைத்திருப்பது பெருமையாக உள்ளது.

**ஒரேயொரு தொலைக்காட்சி தொடரில் கௌரவ வேடத்தில் வந்தீர்கள். ஏன் தொடர்ச்சியாக நடிக்கவில்லை?**

இப்போது ஒரு பெரிய நிறுவனம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கூடிய விரைவில் அறிவிப்பு வரும். ஒரு படம் நடித்து முடித்துவிட்டேன். நான்கைந்து படங்கள் பேச்சு வார்த்தையில் இருக்கிறது.

**ஒரு பெண்ணிற்கு வாழ்க்கைத் துணை எவ்வளவு முக்கியமானது?**

பெண்கள் தனியாக வாழ்வதில் தவறில்லை. ஆனால், துணை என்பது ஒரு காலக்கட்டத்திற்கு பிறகு கட்டாயம் தேவை என்றே இப்போது உணர்கிறேன். வயதான காலத்தில் தனிமையும் மன உளைச்சலும் வரும். அப்போதுதான் துணையின் அருமை தெரியும். சூழ்நிலைகளால் சரியான துணை அமையாமல் போயிருக்கலாம். அதற்காக, ஆண்களே இப்படித்தான், திருமணமே இப்படித்தான் என்று ஒதுக்கித்தள்ளக் கூடாது. நல்ல நபர் அமைந்தால் திருமணம் செய்துகொள்வதில் தவறில்லை.

**பிக்பாஸில் வீட்டிலிருந்த சினேகன் மக்கள் நீதி மய்யத்தில் சேர்ந்துவிட்டார். உங்களுக்கு அரசியல் ஆர்வம் இருக்கிறதா?**

என்றைக்குமே அரசியல் ஆர்வம் எனக்கு இருந்தே வந்திருக்கிறது. பொது நலத்தோடு கூட்டமாக இறங்கி பெண்களுக்கு நல்லது செய்ய நினைத்திருக்கிறேன். ஆனால், அதற்கு நேரம் காலம் அமையவில்லை. இப்போதைக்கு என் தனிப்பட்ட வேலைகளே நிறைய இருக்கிறது. ஆதரவற்ற பெண்களுக்கு நல்லது செய்ய திட்டம் வைத்திருக்கிறேன்.

**பிக்பாஸ் நண்பர்கள் யாருடன் தொடர்பில் இருக்கிறீர்கள்?**

ரேஷ்மா, பாத்திமாபாபு இப்போதும் நெருங்கிய தொடர்பில் உள்ளனர். அபிராமி, சாண்டி, லாஸ்லியா எப்போதாவது பேசுவார்கள்.

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

-கருணாகரன்-

- குடும்பம் என்பது கடவுள் நமக்காக பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க்கம். அதை சொர்க்கமாக்குவதும் நரகமாக்குவதும் நம்முடைய செயல்களில்தான் இருக்கிறது.
- பணத்துக்கான ஓட்டங்களில் நாம் இழந்து கொண்டிருப்பது ஆனந்தத்தின் நிமிடங்களை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.
- ஒரு வேளை நாம் நாளை இறந்து போக நேரிட்டால் அலுவலகம் இன்னொரு திறமைசாலியை சில நாட்களில் கண்டு பிடிக்கும். குடும்பம் அப்படியல்ல.
- ஏற்படும் இழப்பு ஆழமாய்த் தைத்த முள் போல நினைவுகளால் நிமிண்டும் போதெல்லாம் வலித்துக் கொண்டே இருக்கும்.
- வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும் அன்பினால் நிரப்பப்படா விட்டால் அது வெறுமையாகவே இருக்கும். பணமே மகிழ்ச்சியைத் தரும் என்பது தலைமுறைக்குத் தரப்பட்டிருக்கும் தவறான பாடம். மகிழ்ச்சியை சதுர அடிகளில் வாங்க முடியாது.
- குடும்பங்களில் அதிக நேரம் செலவிடுங்கள்.
- அன்பை அதிகமாய் சம்பாதியுங்கள்.






# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO **75%** REFINANCE

## MONTHLY SAVING

**$2,409**

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS


**416.298.2777**

**$375** Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5



BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East, Unit 222 Toronto ON M1S 0C2



PLUS YOU
DRIVING SCHOOL
CERTIFIED ROAD SAFETY INSTRUCTOR
NOW HIRING
DRIVING INSTRUCTORS
Training will be provided
For more Info:
Balan 416.999.7727


வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
TEAM TITANS
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


வீடு வாங்க, விற்க நட்பான சேவை
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
வருமான வரி சேவை Income Tax e-File
416.288.1548 / 416.729.0955


Coaching • Yoga • Meditation • Healing • Astro Guidance
S&S EVOLVE
Varany Sivathasan
Life Coach • Healer
Yoga & Meditation Instructor
416.875.0553
info@ssevolve.com
Unit 8, 151 Nashdene Court, Scarborough,ON M1V 2T3


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


ROYAL MEDICAL AND
PROFESSIONAL CENTRE
2225 Markham Road, Scarborough
UNITS AVAILABLE FOR SALE
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc. Brokerage*


B.J ரெய்லரிங் அன் ஜுவலரி
TAILORING & JEWELLERY CLASSES
We provide training in
Jewellery making and Tailoring
தையல் பயிற்சி மற்றும் ஜுவலரி செய்யும் முறைகள்
கற்றுக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416-720-4472
email: jegathees2007@gmail.com


HOMES & CONDOS FOR SALE
Brock/Rossland - Whitby
For sale
Gas Station
York St/Bremner St - Toronto
$699,900
Condo Apt - 2BR/1WR
Cambray Rd/North St - Kawartha
$369,900
Bungalow -2BR/1WR
1st & 2nd mortgage availabe upto 1Million
Specialized in New Condos & Cottages
A.ANTON JEEVA,FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.getanton.com
RE/MAX
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110


www.tamilvanakkam.com
Tamil
VANAKKAM
தமிழ் வணக்கம்
உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்